வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 25.04.2024 வியாழக்கிழமை இதழ் : 116 பக்கங்கள் : 12

# இலங்கை அரசும் முகவர்களும் படுகொலைகளில் ஈடுபட்டனர்!

## மனித உரிமை அறிக்கையில் அமெ. குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்ரல் 25

**இலங்கை அரசாங்கமும் அதன் முகவர்களும் கண்மூடித்தனமான அல்லது சட்டவிரோத கொலைகளில் ஈடுபட்டனர். இவை தொடர்பாக பல தகவல்கள் வெளியாகியுள்ளன என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.**

2023 இல் உலக நாடுகளில் மனித உரிமை நிலவரம் குறித்த தனது வருடாந்த அறிக்கையில் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் இதனை தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கமும் அதன் முகவர்களும் கண்மூடித்தனமான அல்லது சட்டவிரோத கொலைகளில் ஈடுபட்டனர் என பல தகவல்கள் வெளியாகியுள்ளன. பொலிஸாரின்

11




## 250 ரூபாய் குறைகிறது பால்மா!

கொழும்பு, ஏப். 25

இன்று வியாழக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை குறைக்கப்படுகின்றது.

இதன்படி, ஒரு கிலோ கிராம் பால்மா பைக்கெற்றின் விலை

11

## தமிழ் அரசு கட்சிக்கு எதிரான வழக்கு மே 31இற்கு ஒத்திவைப்பு

- குலநாயகம், சத்தியலிங்கம் ஆட்சேபனை மனு
- மன்றில் ஆஜராகாத அகிலனுக்கு பிடியாணை!

திருமலை, ஏப். 25

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவு தொடர்பான வழக்கு மே 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில், எதிராளிகளாகப் பெயரிடப்பட்ட எக்ஸ். குலநாயகம், ப. சத்தியலிங்கம் ஆகியோர் ஆட்சேபனை மனுவை தாக்கல் செய்தனர்.

நேற்றைய வழக்கு விசாரணையில் ஜனாதிபதி சட்டத்தரணிகள் கே. வி. தவராசா, எம். ஏ. சுமந்திரன் இடையே கடும் வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன.

தலைவர், பொதுச் செயலர் பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட சிறீதரன், குகதாசன் ஆகியோர் சார்பில் வாதாடிய

11

## தேர்தல் குறித்து விரைவில் தீர்மானத்தை மேற்கொள்க!

### ஜனாதிபதியிடம் பஸில் கோரிக்கை

கொழும்பு, ஏப். 25

எதிர்வரும் தேர்தல் தொடர்பில் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியிடம் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று முன்தினம் பிற்பகல் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

11

## சஹ்றானின் கொள்கையுடன் 5 ஆயிரம் பேர் இலங்கையில்!

### அத்துரலிய ரத்ன தேரர்

கொழும்பு, ஏப். 25

சஹ்றானின் கொள்கைகளை கொண்ட ஐயாயிரம் பேராவது இலங்கையில் இருக்கலாம். இங்கிருந்து ஐ. எஸ். ஐ. எஸ். பயங்கரவாத அமைப்புடன் சென்று போராடுபவர்கள் இல்லையென கூற முடியுமா? என்று பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் கேள்வி எழுப்பினார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் ஒத்திவைப்பு

11

## சிறுமி கொலை குற்றவாளி இந்தியாவுக்கு தப்பித்தார்!

### சாள்ஸ் நிர்மலநாதன் எம். பி.

கொழும்பு, ஏப். 25

தலைமன்னாரில் 8 வயதுச் சிறுமி பாலியல் வன்கொடுமை செய்து கொல்லப்பட்ட சம்பவத்தில் கைதான சந்தேகநபரான அப்துல் ரகுமான் என்ற நபர் வவுனியா மருத்துவமனையிலிருந்து தப்பித்து இந்தியா சென்றுள்ளார். என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்

11

## ஈரான் - இலங்கை ஜனாதிபதிகளால் ‘உமா ஓயா’ திட்டம் திறந்து வைப்பு

கொழும்பு, ஏப். 25

மகாவலிக்கு அடுத்து இலங்கையின் மிகப்பெரிய நீர்ப்பாசன திட்டமான ‘உமா திய ஜனனி’ பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் நேற்று இலங்கை - ஈரான் ஜனாதிபதிகளால் மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின்

11



## படகு இயந்திரத்தில் சிக்கி மீனவர் பலி!

மன்னார், ஏப். 25

மீன்பிடிக்க கடலுக்கு படகில் சென்றபோது இயந்திரத்தின் காற்றாடி வெட்டியதில் மீனவர் உயிரிழந்தார்.

மன்னார் - முத்தரிப்புத்துறையில் நேற்று புதன்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், மூன்று பிள்ளைகளின் தந்தையான தேவராஜா

11

## ரூ. 1,700 சம்பளம் சாத்தியமற்றது!

### முதலாளிமார் சம்மேளனம்!

கொழும்பு, ஏப். 25

நாள் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபாய் வழங்கப்பட வேண்டும் என்ற பெருந்தோட்ட தொழிலாளர்களின் கோரிக்கை சாத்தியமற்றது என்று இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் அறிவித்தது.

இதேநேரம், நேற்றைய தினம் சம்பள நிர்ணய சபையின்

11

## இலங்கை அபிவிருத்திக்கு ஈரான் உதவுவதற்கு தயார்

### அந்நாட்டு ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 25

இலங்கையின் மிகப்பெரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு தொழில்நுட்ப மற்றும் பொறியியல் சேவைகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்கும் உதவத் தயார் என்று ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி தெரிவித்தார்.

“உமா ஓயா” பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் நேற்று ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரால்

11

## யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நீதிபதி இளஞ்செழியன் சாட்சி!

### மூன்று தினங்கள் வழக்கை நடத்த முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 25

நீதிபதி இளஞ்செழியன் நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்றில் முன்னிலையாகி சாட்சியம் அளித்தார். அத்துடன், இந்த வழக்கை தொடர்ந்து மூன்று தினங்கள் விசாரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2017 ஜூலை 22ஆம் திகதி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக இருந்த மா. இளஞ்செழியன்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இதில், அவர் உயிர்தப்பினார். இந்த சம்பவத்தில் நீதிபதியின் மெய்ப்பாதுகாவலர்

11

## கோட்டாவுக்கு நேர்ந்தது இறைவனின் சாபம்!

### கபீர் ஹாசிம் எம். பி.

கொழும்பு, ஏப். 25

கோட்டாபயவுக்கு ஏற்பட்டது இறைவனின் சாபம் என்று நான் நினைக்கிறேன் என்று ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய அவர்,

கோட்டாபய ராஜபக்ஷ தான் எழுதிய புத்தகத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் உள்ளிட்ட சிறுபான்மை

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

ஈழநாடு



# இப்படியும் நடக்கிறது

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர், தனது பிள்ளைகள் பாடசாலையில் பரீட்சை எழுதிவிட்டு எப்போது சித்தியடைந்தாலும் அதனை கண்டுகொள்ள மாட்டார்.

ஐந்தாம் வகுப்பில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தமது பிள்ளைகளின் படங்களை போட்டு வாழ்த்தி பத்திரிகைகளில் விளம்பரம் செய்யும் இன்றைய காலத்தில் அவரின் நடவடிக்கை சற்று ஆச்சரியத்தைத் தரும்.

அதுவும் அவரின் பிள்ளைகள் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் சாதனை செய்தபோதும் அவர் அதனைக் கண்டுகொண்டதில்லை.

ஒருநாள் பொறுக்க முடியாமல் அவரை திட்டியும் விட்டேன். "பிள்ளைகள் இப்படி சிறப்பாக பரீட்சை எழுதிவிட்டு சாதனையோடு வருகின்றபோது நீர் மகிழ்ச்சியடைவதில்லையே ஏன்?" என்று கேட்டேன். அவர் சொன்னார், "பிள்ளைகள் அப்படி பாஸ் பண்ணுவார்கள் என்பது எனக்கு முதலே தெரிந்தது தான். அவர்கள் அப்படி பாஸ் பண்ணவில்லை என்றால்தான் எனக்கு அது ஆச்சரியம். அப்படி நடந்தால் அதனைப் பற்றி பேசியிருப்பேன்" என்றார்.

அவர் இவ்வாறு பதிலளித்ததுதான், இப்போது எனக்கு ஞாபகத்துக்கு வந்தது.

நேற்று திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் நடைபெற்ற தமிழ் அரசு கட்சியின் வழக்கு எப்படி முடிவடைந்தது என்பதை ஒரு நண்பரிடம் கேட்ட போது அவர் சொன்ன பதில்தான் எனக்கு மேலே சொன்ன கதையை ஞாபகப்படுத்தியது.

"அது தெரிந்ததுதானே. வழக்கு விரைவில் முடிய வேண்டும் என்று கட்சிக்காரர்களுக்கே அக்கறையில்லாதபோது நீர் எதற்கு அவ்வளவு அக்கறையுடன் விசாரிக்கிறீர்? வழக்கு இப்படித்தான் முடியும் என்பது உமக்குத் தெரியாதா?" என்றார் நண்பர்.

உண்மைதான். வழக்கு விவகாரத்தை எப்படி கையாள்வது என்பது குறித்து கட்சி மட்டத்தில் விவாதித்து முடிவெடுப்பதற்காக கடந்த பத்தொன்பதாம் திகதி தமிழ் அரசின் மத்திய செயல்குழு கூடவிருந்தது. பின்னர் அன்னை பூபதியின் நினைவு தினம் என்பதால் அதனை ஒத்திவைத்தார்கள். உண்மையாகவே, கூட்டம் கூடி அந்தப் பிரச்னை பற்றி முடிவெடுக்கவேண்டும் என்று கட்சிக்காரர்கள் நினைத்திருந்தால், அன்றைய தினம் கூட்டத்தைக் கூட்டிவிட்டு அந்த கூட்ட மண்டபத்திலேயே அன்னை பூபதியின் படம் ஒன்றை வைத்து அவர்களும் அஞ்சலி செலுத்திவிட்டுக் கூட்டத்தை நடத்தியிருக்கலாம்.

பின்னர், கூட்டம் இருபத்தி மூன்றாம் திகதி நடக்கும் என்றார்கள். அதுபற்றிய அறிவிப்புக்களும் ஊடகங்களுக்கும் வழங்கப்பட்டன. அதிகம் ஏன்? - ஒரு பேட்டி ஒன்றில், தமிழ் பொதுவேட்பாளர் பற்றிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த தமிழ் அரசின் எம். பி. ஒருவர், இருபத்தி மூன்றாம் திகதி தமது கட்சியின் மத்திய செயல்குழு கூடுகின்றபோது அதுபற்றி கட்சி மட்டத்தில் பேசி முடிவெடுக்கப்படும் என்று கூறியிருந்தார்.

அதாவது, இருபத்தி மூன்றாம் திகதி தமிழ் அரசின் மத்திய செயல்குழு கூடவிருக்கின்றது என்று கூறியிருந்தார்.

ஆனால், இருபத்தி மூன்றாம் திகதி அப்படியொரு கூட்டமே நடக்கவில்லை. கூட்டம் குறித்து தகவல்களை அறிவதற்காக பலரிடம் தொடர்பு கொண்டபோதுதான், அப்படியொரு கூட்டம் நடக்கவில்லை என்பது தெரியவந்தது. அதுவல்ல, முக்கியமானது, அப்படியொரு கூட்டம் நடக்கவிருப்பதாகத் தமக்கு கட்சியிலிருந்து தெரியப்படுத்தப்படவில்லையே என்றார்கள் பலர்.

ஆனால், கூட்டம் அன்று நடக்கவிருக்கின்றது என்று பல ஊடகங்கள் செய்திவெளியிட்டபோதிலும்கூட, கட்சியின் முக்கியஸ்தர்கள் எவருமே அந்த ஊடகங்களுடன் தொடர்புகொண்டு அப்படியொரு கூட்டம் நடப்பதாக இல்லையே என்று திருத்தம் செய்துகொள்ளவும் முயற்சிக்கவில்லை. இதுதான் நமது தமிழ் அரசு கட்சியின் இன்றைய இலட்சணம். இத்தனைக்கும், தாங்கள்தான் தமிழ் மக்கள் தரப்பில் அரசியல் முடிவுகளை செய்யக்கூடிய சக்தியுடன் இருப்பவர்கள் என்றும், அதிலும் தாமே இன்னமும் கட்சி முடிவுகளை எடுக்கின்ற நிலையில் இருப்பவர்கள் என்றும் தெற்கில் ஆங்கில ஊடகங்களுக்கு சொல்லிக் கொண்டிருக்கின்றனர் சில கட்சிக்காரர்கள்.

**- ஊர்க்குருவி.**





# குப்பிழான் கௌரி அம்பாள் தேர்த் திருவிழா

குப்பிழான், ஏப். 25

யாழ்ப்பாணம், குப்பிழான் தெற்கு வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா திங்கட்கிழமை இடம்பெற்றது.

காலை 8. 45 மணியளவில் வசந்த மண்டப பூஜை வழிபாடுகள் நடைபெற்றதைத் தொடர்ந்து திருநடனத்துடன் கௌரி அம்பாள் எழுந்தருளி சித்திரத் தேரில் ஆரோகணம் செய்தாள்.

சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு பண்ணுடன் ஓதப்பட்டுச் சிதறு தேங்காய்கள் உடைக்கப்பட்டதைத் தொடர்ந்து அடியவர்களின் அரோகரா கோஷம் முழங்க முற்பகல் 11 மணியளவில் சித்திரத் தேர்ப் பவனி ஆரம்பமானது.

இந்த ஆலயத் தேர்த் திருவிழாவில் பல நூற்றுக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டனர். (எ)

### கார் பந்தய ஏற்பாட்டாளர்களை

# "குற்றவாளிகள் என்று பெயரிட வேண்டும்"

கொழும்பு, ஏப். 25

தியத்தலாவை கார்பந்தய போட்டியில் ஏற்பட்ட விபத்துக்கு போட்டி ஏற்பாட்டாளர்களின் கவனயீனமே காரணமாகும். அதனால் போட்டி ஏற்பாட்டாளர்கள் தண்டனைக்குரிய குற்றவாளிகள் என பெயரிடப்பட வேண்டும். இவ்வாறு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தியத்தலாவை கார் பந்தயத்தின்போது ஏற்பட்ட விபத்தில் 7 பேர் மரணித்து 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்த விபத்து போட்டி ஏற்பாட்டாளர்களின் கவனயீனம் காரணமாகவே ஏற்பட்டது. இதுதொடர்பில் நாங்கள் ஆராய்ந்த போது, ஓடுபாதையிலிருந்து 50 மீற்றருக்கு அப்பால் இராணுவத்தினர் இருப்பார்கள், அதற்குப் பின்னாலே பார்வையாளர்கள் இருக்க வேண்டும். அதே போன்று தூசி இருக்குமானால் ஒவ்வொரு போட்டிக்குப் பின்னரும் தண்ணீர் தெளிக்க வேண்டும். அத்துடன் சிறிய வளைவிலும் மணல் மூடைகள் போட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், இந்த நடவடிக்கைகள் எதனையும் போட்டி ஏற்பட்டாளர்கள் செய்திருக்கவில்லை. அதனால் இந்த விபத்துக்கு காரணமான போட்டி ஏற்பாட்டாளர்கள் தண்டனைக்குரிய குற்றவாளிகள் எனப் பெயரிடப்பட வேண்டும். அவர்களுக்கு எதிராக சட்டத்தை நிலைநாட்டவேண்டும்.

தற்போது கைது செய்யப்பட்டிருப்பது, கார் பந்தய போட்டியில் போட்டியிட்டவர்கள். இது கிரிக்கெட் போட்டியில் துடுப்பாட்ட வீரர் அடித்த பந்து பார்வையாளர் ஒருவரின் தலையில் விழுந்ததால் அந்தத் துடுப்பாட்ட வீரரை கைது செய்வது போன்றதாகும்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாராளுமன்றத்துக்குப் பொறுப்பு இருக்கிறது. கவனயீனமாக செயல்பட்ட போட்டி ஏற்பாட்டாளர்களுக்குத் தண்டனை வழங்கினால்தான் எதிர்காலத்தில் இவ்வாறான தவறு ஏற்படாமல் தடுக்க முடியும்.

பாராளுமன்றம் இதுதொடர்பில் கவனம் செலுத்தி குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். - என்றார். (எ)

# அமரவீர, லசந்த, துமிந்த மீதான பதவி நீக்கத்துக்கு தடை நீடிப்பு!

கொழும்பு, ஏப். 25

அமைச்சர்களான மஹிந்த அமரவீர, லசந்த அழகியவண்ண மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸநாயக்க ஆகியோரை சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதவிகளிலிருந்து நீக்கும் தீர்மானத்துக்கு எதிரான தடையை மே 24 ஆம் திகதி வரை நீடிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான உத்தரவிட்டுள்ளார்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியில் தாம் வகித்து வந்த பதவிகளிலிருந்து தம்மை நீக்க முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட நிறைவேற்றுச் சபை எடுத்த தீர்மானத்துக்கு எதிராகத் தாக்கல் செய்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மேற்கண்டவாறு உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கு ஆட்சேபனைகளை சமர்ப்பிப்பதற்காக அழைக்கப்பட்ட போதிலும், பிரதிவாதி சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய திகதியை வழங்குமாறு நீதிமன்றில் கோரினர்.

இதன்படி, ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய மே 8 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கிய நீதிபதி, வழக்கை அன்றைய தினம் மீண்டும் அழைக்குமாறு உத்தரவிட்டார்.

(எ)

# அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வவுனியாவில் நேற்று போராட்டம்

வவுனியா, ஏப். 25

வவுனியா மாவட்டத்தில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நேற்றுப் புதன்கிழமை வவுனியா மாவட்ட செயலகம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கான போக்குவரத்துக் கொடுப்பனவு மற்றும் காகிதாதிகளின் கொடுப்பனவுகளை வழங்குமாறு கோரியே இந்தக் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது பதாதைகளை தாங்கியிருந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சுமார் ஒரு மணி நேரம் போராட்டத்தில் ஈடுபட்டனர். (எ)



ஈழநாடு
Eelanadu
25.04.2024 வியாழக்கிழமை
குரோதி வருடம், சித்திரை 12

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் கட்சிகளின் கவனத்துக்கு!

ஜனாதிபதித் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு தென்னிலங்கை அரசியல் பரபரப்பாகிக் கொண்டிருக்கின்றது. மும்முனை போட்டிக்கான நிலைமை தெரிகின்றது. தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்களாக வெளித்தெரிபவர்கள் ஒவ்வொருவரும் – குறிப்பாக, ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் தமிழ் மக்கள் தங்களுக்கே வாக்களிப்பார்கள் என்னும் அடிப்படையில் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர் எனவும் தெரிகின்றது. ஆனால், தமிழ் மக்களின் வாக்குகளை எதிர்பார்க்கும் எவருமே தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்னைக்கான தீர்வை முன்வைக்கும் முதுகெலும்பு இல்லாதவர்களாகவே இருக்கின்றனர்.

இதேபோன்று, மற்றவர்களை விடவும் மாறுபாடானவர் என்னும் அடிப்படையில் தன்னை காண்பிக்க முற்படும் அநுர குமார திஸநாயக்க இலங்கையர் என்னும் நிலைமையை ஏற்படுத்தப் போவதாகக் கூறுகின்றார். தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னையை அங்கீகரிக்காமல் – தமிழ் மக்கள், தமிழ் மக்களாக வாழக்கூடிய நிலையை ஏற்றுக்கொள்ளாமல் எவ்வாறு தமிழ் மக்களை இலங்கையர் என்னும் நிலையில் வாழவைக்க முடியும்?

அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமென்னும் போட்டியில் ஈடுபட்டிருக்கும் அனைத்துத் தென்னிலங்கை கட்சிகளும் ஒரு விடயத்தில் ஒன்றாகவே இருக்கின்றன. அதாவது, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் பேசினால் சிங்கள மக்களின் வாக்குகளை இழந்துவிடுவோம். எனவே, இதுபற்றி பொது வெளிகளில் பேசக்கூடாது. இவ்வாறானதொரு நிலையில் தமிழ் மக்கள் எவ்வாறான முடிவை எடுப்பது? இதற்கு பதிலளிக்க வேண்டிய தமிழ்த் தேசிய கட்சிகளோ தங்களுக்குள் முட்டிமோதிக் கொள்வதிலேயே கவனம் செலுத்தி வருகின்றனர். இன்றைய அரசியல் சூழலுக்கு ஏற்றவாறு தமிழ் மக்களை தயார்படுத்தும் பணிகளை எவருமே முன்னெடுக்கவில்லை.

"மக்கள் மனு" சிவில் சமூகம் தமிழ் பொது வேட்பாளர் விவகாரத்தை பொது வெளிக்குக் கொண்டுவந்தது. கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போதும் தமிழ் பொது வேட்பாளர் விடயம் பேசப்பட்டாலும் கூட இந்தளவு பரவலாக பேசப்படவில்லை. இந்த நிலையில், இது தொடர்பில் அனைத்துத் தரப்புகளும் ஒன்றிணைந்து தீர்க்கமான முடிவொன்றை எடுக்க வேண்டியிருக்கின்றது.

உண்மையில், தமிழ் அரசியல்சூழல் பரபரப்பாக இருக்க வேண்டும். ஆனால், அப்படி இடம்பெறவில்லை. காரணம் என்ன? ஒரு பதில்தான் உண்டு. கட்சிகளின் தலைவர்கள் அனைவருக்கும் வயது மட்டும் போகவில்லை. புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு புத்தாக்கம்மிக்க அணுகுமுறைகள் தொடர்பில் சிந்திக்கக்கூடியவாறான ஆற்றலையும் அவர்கள் இழந்துவிட்டனர் போலும்.

இது மாற்றத்துக்கான தேர்தல் என்று கூறிக்கொண்டு, முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் புதைக்கும் முயற்சியையும் சிலர் முன்னெடுக்க முயற்சிக்கின்றனர். செயல்பட வேண்டியவர்கள் அமைதியாக இருந்தால் செயல்படக்கூடாதவர்களே விடயங்களைத் தீர்மானிப்பார்கள். எனவே, தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறிக்கொண்டு தங்களை முன்னிலைப்படுத்தும் அனைத்துத் தரப்புகளும் தங்களின் அமைதிக்கு முற்றுப்புள்ளியிட வேண்டும்.

# தந்தை செல்வா நினைவுதினம்; அஞ்சலியும் நினைவுப்பேருரையும்

*யாழ்ப்பாணம், ஏப். 25*

தந்தை செல்வாவின் 47ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அஞ்சலியும் நினைவுப் பேருரையும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு தந்தை செல்வா நினைவிட வளாகத்தில் ஓய்வுநிலை ஆயர் கலாநிதி சு. ஜெபநேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தந்தை செல்வாவின் சிலைக்கு மாலை அணிவித்து அவரின் சமாதியில் மலர் அஞ்சலி நடைபெறும்.

இதைத் தொடர்ந்து, நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக அரசியல் துறை தலைவர் பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம், "இலங்கை தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கான வாய்ப்புகளும் சவால்களும்" என்ற தலைப்பில் ஆற்றுவார்.

பிற்பகல் 4 மணிக்கு தெல்லிப்பழை சேமக் காலையில் அஞ்சலி நிகழ்வு நடைபெறவுள்ளது.

(ஐ)

# விஜயதாஸ, துஷ்மந்தவுக்கு நீதிமன்றம் தடை விதித்தது

*கொழும்பு, ஏப். 25*

கடந்த 21ஆம் திகதி சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராகவும் பதில் பொது செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்ட அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, சாரதி துஷ்மந்த ஆகியோருக்கு கொழும்பு பிரதான மாவட்ட நீதிவான் சந்துன்விதான இரண்டு தடை உத்தரவுகளை புதன்கிழமை பிறப்பித்துள்ளார்.

சிறீ லங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களும் அமைச்சர்களுமான லசந்த அழகிய வண்ண, துமிந்த திஸநாயக்க, மகிந்த அமரவீர ஆகியோரின் மனுவை பரிசீலித்ததன் பின்னர் வெளியிடப்பட்ட இந்த தடை உத்தரவுகள் அடுத்த மாதம் எட்டாம் திகதி வரை அமுலில் இருக்கும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மனுதாரர்கள் சார்பில், ஜனாதிபதியின் சட்டத்தரணி சந்தக ஜயசுந்தர, நீதிமன்றில் வாதகங்களை முன்வைத்து, பிரதிவாதிகள் அந்தப் பதவிகளில் அமர்வது சட்டவிரோதமானது மற்றும் கட்சியின் யாப்புக்கு முரணானது எனத் தெரிவித்தார்.

விஜயதாஸ ராஜபக்ஷ, சிறீ லங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்காதவர் எனவும், அங்கம் வகிக்காத வேறு ஒரு கட்சியின் உறுப்பினர் சிறீ லங்கா சுதந்திர கட்சியில் பதவி வகிப்பது அரசமைப்பு சட்டத்துக்கு முரணானது எனவும் தெரிவித்தார்.

கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் இந்தப் பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்டனர் என்றும் அந்தப் பதவிகளை தெரிவு செய்வதற்காக கூட்டப்பட்ட நிறைவேற்று சபை சட்டவிரோதமான முறையில் நடத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதில் செயலாளர் ஷரதி துஷ்மந்த மித்ரபால, முன்னாள் ஜனாதிபதி நிமால் சிறிபால டி சில்வா, பதில் தலைவர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோருக்கு இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# விஜயதாஸமீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்!

சாகர காரியவசம்

*கொழும்பு, ஏப். 25*

அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவின் அங்கத்தவராக இருக்கும் நிலையில் சிறீ லங்கா சுதந்திர கட்சியின் அங்கத்துவம் பெறுவது தொடர்பில் பொதுஜன பெரமுனவின் ஒழுக்காற்று சபை விசாரணை நடத்தும் என கட்சியின் செயலாளர் சாகரகாரியவசம் தெரிவித்துள்ளார்.

கட்சியின் யாப்பின் பிரகாரம் பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்கும் போது வேறு கட்சியில் அங்கத்துவம் பெற முடியாது எனவும், அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகித்தால் பொதுஜன பெரமுனவில் உறுப்பினராக இனியும் இருக்க முடியாது என காரியவசம் கூறியுள்ளார்.

இந்த நிலையில், விஜயதாச ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவின் உறுப்புரிமையை இழந்தால், அது அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கும் சவாலாக இருக்கலாம் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## சீன முகமூடிகளுக்கு மவுசு

*கொழும்பு, ஏப். 25*

வெசாக் பண்டிகைக்காக சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சில முகமூடிகள் கொழும்பில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும் இந்த முகமூடிகளுக்கு அதிக கிராக்கி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது .

இந்த முகமூடியில் எல். ஈ. டி. உள்ளது. பல்புகளும் ஒளிரும். நாட்டில் முதன் முறையாக இவ்வகை முகமூடிகள் விற்பனை செய்யப்படுவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

பல்வேறு வடிவங்கள் மற்றும் வண்ணங்களின் முகமூடிகள் விற்கப்படுகின்றன. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஏப்ரல் - 25 வியாழக்கிழமை
குரோதி வருடம் - சித்திரை 12
நல்ல நேரம் : 10.30 - 11.30
ராகு காலம் : 01.30 - 03.30
திதி : துவிதியை



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். வேலைகள் சிறப்பாக முடியும்.

**இடபம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில்உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தினருடன் நேரத்தை செலவழிப்பார்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். கேட்டது கிடைக்கும் நாள்.

**கடகம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கன்னி**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
கணவன் - மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். மேலதிகாரியுடன் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறுவீர்.

**தனுசு**
உங்களுடைய ஆலோசனைகளை எல்லோரும் ஏற்கும்படி இருக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மகரம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். புதிய முயற்சியில் வெற்றி கிட்டும் நாள்.

**கும்பம்**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிட்டும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் தன்னம்பிக்கை குறையும். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறை கூறுவார்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

# இரண்டரை இலட்சம் புத்தகங்களை நான் கொடையாக அளித்துள்ளேன்

## முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, ஏப். 25

"புத்தகங்களைப் பரிமாறிக் கொள்வதை ஓர் இயக்கம் என நான் தொடங்கியது முதல் பெறப்பட்ட இரண்டரை இலட்சம் புத்தகங்களுக்கு மேல், பல மாணவர்களுக்கும் நூலகங்களுக்கும் கொடையளித்துள்ளேன்" என்று தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் உலக புத்தக தினத்தையொட்டி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்,



"புதிய உலகத்துக்கான திறவுகோல், அறிவின் ஊற்று, கல்விக்கான அடித்தளம், சிந்தனைக்கான தூண்டுகோல், மாற்றத்துக்கான கருவி, மக்களை உணர வழிகாட்டி எனப் புத்தகங்கள் மனித சமுதாயத்தைத் தழைக்க செய்யும் கொடை.

புத்தகங்களை வாசியுங்கள் - நேசியுங்கள், பிறர்க்கு பரிசளித்து வாசிக்க ஊக்கப்படுத்துங்கள். புத்தகங்களைப் பரிமாறிக் கொள்வதை ஓர் இயக்கம் என நான் தொடங்கியது முதல் பெறப்பட்ட இரண்டரை இலட்சம் புத்தகங்களுக்கு மேல், பல மாணவர்களுக்கும் நூலகங்களுக்கும் கொடையளித்துள்ளேன். கையில் புத்தகங்கள் தவழட்டும், சிந்தனைகள் பெருகட்டும் நல்வழி பிறக்கட்டும்" என்று கூறியுள்ளார். (ஐ)

# சிறுபான்மை மக்களுக்கு பாதிப்பு மோடி ஆட்சியில் ஏற்படவில்லை

## ஓ. பி. எஸ். தெரிவிப்பு

மதுரை, ஏப். 25

மோடியின் ஆட்சியில் எங்கும் சிறுபான்மை மக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் செய்தியாளர்களை சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தேர்தல் ஆணைய அதிகாரிகள் அறிவிக்கும் வாக்குப்பதிவு சதவீதத்தில் எப்போதும் வித்தியாசம் வரத்தான் செய்யும். அ. தி. மு. கவை மீட்பது குறித்து கேட்கிறீர்கள். பொறுத்திருந்து பாருங்கள். அது நடக்கும். பிரதமர் மோடி 10 ஆண்டுகாலம் சிறப்பான ஆட்சி நடத்தியுள்ளார். அவ



ரின் ஆட்சியில் எங்கும் சிறுபான்மை மக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை - என்றார். (ஐ)

# பிரதமர் மோடி பகிரங்க மன்னிப்பு கோரவேண்டும்!


## நாம் தமிழர் சீமான்

சென்னை, ஏப். 25

"ராஜஸ்தான் மாநிலத்தில் தேர்தல் பரப்புரையின்போது இஸ்லாமியர்களை இழிவுப்படுத்தி பேசியதற்கு பிரதமர் மோடி, நாட்டு மக்கள் அனைவரிடமும் உடனடியாக பொது மன்னிப்பு கேட்க வேண்டும்" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

"இந்தியப் பெருநாடு விடுதலையடைவதற்கு முன்பிருந்தே இஸ்லாமிய பெருமக்கள் நீண்ட காலமாக இந்த நிலத்தில் நிலைத்து வாழ்ந்து வருகின்றனர். இந்த மண்ணின் கோடிக்கணக்கான பூர்வகுடி மக்கள் இஸ்லாத்தை விரும்பி ஏற்றுள்ளனர். அவர்கள் யாரும் இந்த நாட்டுக்கு அந்நியர்கள் அல்ல. ஆனால், பிரதமர் மோடி இந்தியாவில் வாழும் இஸ்லாமியர்கள் அனைவரும் இந்த நாட்டுக்கு வெளியிலிருந்து வந்தவர்கள் போலவும், இந்துகளின்



சொத்துகளை அபகரித்தது போலவும் பேசுவது அற்ப அரசியல் லாபத்துக்காக மதப் பிரிவினையை ஏற்படுத்துகின்ற சிறிதும் மனச்சான்றற்ற செயலாகும்.

ஆகவே, இஸ்லாமியர்களை இழிவுப்படுத்தி பேசியதற்கு பிரதமர் மோடி நாட்டு மக்கள் அனைவரிடமும் உடனடியாக பொதுமன்னிப்பு கேட்க வேண்டும் - என்றார். (ஐ)

# ராகுல் வெள்ளை அறிக்கை வெளியிடுவதற்கு தயாரா?

## அண்ணாமலை கேள்வி

திருவனந்தபுரம், ஏப். 25

வயநாடு தொகுதிக்கு என்ன செய்தேன் என ராகுல் வெள்ளை அறிக்கை வெளியிட முடியுமா? என பா. ஜ. கவின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை சவால் விடுத்துள்ளார்.

கேரள மாநிலம் வயநாட்டில் தேர்தல் பிரசாரத்தில் அண்ணாமலை பேசியவை வருமாறு,

பா. ஜ. க. வேட்பாளர் சுரேந்திரன் ராகுலை தோற்கடிக்க ஓட்டு கேட்டு வரவில்லை. மக்களுக்கு சேவை செய்ய வந்துள்ளார். கடந்த ஐந்தாண்டுகளில் வயநாடு தொகுதிக்கு என்ன செய்தேன் என ராகுல் வெள்ளை அறிக்கை வெளியிட முடியுமா?.

வயநாடு தொகுதியில் சுரேந்திரன் அதிக ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெறப்போகிறார்.



10 முறைக்கும் குறைவாகவே ராகுல் வயநாடு தொகுதி மக்களை சந்தித்துள்ளார். தற்போது அவர் தேர்தல் பிரசாரத்திற்கு மட்டும் வருகிறார். இதன் மூலம் காங்கிரசின் மனநிலை என்ன என்பது தெளிவாகிறது - என்றார்.

# காணாமலாக்கப்பட்டோர் விசாரணைகளில் சிறிதளவு முன்னேற்றமும் ஏற்படவில்லை

## மனித உரிமை நிலவர அறிக்கையில் அமெரிக்கா

கொழும்பு, ஏப். 25

**இலங்கையில் 1983ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டுவரை இடம்பெற்ற மனித உரிமை துஷ்பிரயோகங்கள், காணாமற்போன சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகளில் சிறிதளவு முன்னேற்றமும் இல்லை என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.**

2023 இல் உலக நாடுகளில் மனித உரிமை நிலவரம் குறித்த தனது வருடாந்த அறிக்கையில் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் இதனை தெரிவித்துள்ளது.

1983ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டுவரை இடம்பெற்ற மனித உரிமை துஷ்பிரயோகங்கள் தொடர்பிலான விசாரணைகளில் சிறிதளவு முன்னேற்றம் இல்லை. அதே போல 1988-1989 ஜே.வி.பி கிளர்ச்சிக் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை துஷ்பிரயோகங்கள் குறித்த விசாரணைகளிலும் எந்த முன்னேற்றமும் இல்லை என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதிகளவில் கவனத்தை ஈர்த்த காணாமல்போன சம்பவங்கள் குறித்த விசாரணைகளிலும் முன்னேற்றம் இல்லை எனவும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் கூறியுள்ளது.

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட தொடர்புபட்ட 2008 - 2009 இல் கொழும்பில் 11 தனிநபர்கள் கடத்தப்பட்டு காணாமல் போன சம்பவம் தொடர்பிலான விசாரணைகளிலும் முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றும் அது குறிப்பிட்டுள்ளது. (அ)

# இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் காதி நீதிபதிக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஏப். 25

விவாகரத்து சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்காக 5000 ரூபாவை இலஞ்சமாக கோரிய புத்தளம் காதி நீதிபதிக்கு புத்தளம் நீதிமன்ற நீதிவான் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் குறித்த காதி நீதிபதி முகமட் என்பவரை அணுகி விவாகரத்து சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்காக ரூபா 5000 இலஞ்சமாக பெற்ற குற்றச்சாட்டு அடிப்படையில் மாறுவேடத்தில் சென்ற இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபரான காதி நீதிபதி அன்று இரவு புத்தளம் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டபோது 14 நாட்கள் மே 06 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த காலங்களில் குறித்த காதி நீதிபதி தொடர்பிலான விமர்சனங்கள் மற்றும் அவரின் முறையற்ற செயற்பாடுகள் சமூக ஊடகங்களில் வெளியாகி இருந்ததுடன் இவ்விடயம் தொடர்பாக புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமுக்கு தொடர்ச்சியான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன.

இதற்கமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் மற்றும் நீதி அமைச்சருக்கும், நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கும் இது தொடர்பான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக தர்மசிறி பதவியேற்பு



யாழ்ப்பாணம், ஏப். 25

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக விதான பத்திரனஹாலகே சமன் தர்மசிறி பத்திரன நேற்று சம்பிரதாயபூர்வமாக கடமைகளை பொறுப்பேற்றார்.

யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்துள்ள வடக்கு மாகாண சுகாதார பணிமனையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக இருந்த, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தனது பொறுப்புக்களை புதிய பணிப்பாளர் பத்திரனவிடம் கையளித்தார்.

இதன்போது வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் கே.நந்த குமாரன் உள்ளிட்ட சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (அ)

# பிரபல வர்த்தகரிடம் 100 மில்லியன் பேரம் பேசினாராம் மைத்திரிபால!

## மகிந்த அமரவீர பகிரங்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 25

ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள பிரபல வர்த்தகர் ஒருவரிடம், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுதந்திர கட்சியை ஏலம் விடுவதற்கு 100 மில்லியன் பேரம் பேசியுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர குற்றஞ்சுமத்தினார்.

விவசாய அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலே அவர் இவ்வாறு குற்றஞ்சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவே சுதந்திர கட்சியின் சட்ட பூர்வமான பதில் தவிசாளராவார். அவருக்கான நியமனம் வழங்கப்பட்டு இரண்டு வாரங்கள் கடந்துள்ளன. அவரது நியமனத்துக்கு எதிராக எவ்வித ஆட்சேபனைகளும் வெளியிடப்படவில்லை. எந்த தரப்பும் நீதிமன்றத்துக்கும் செல்லவில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை திடீரென நிறைவேற்றுக்குழு கூட்டப்பட்டது. எமக்கு அழைப்பு வரும்போது செல்வதற்கான நேரம் கூட இல்லை. அத்தோடு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. செயலாளருக்கும் அந்த தடையுத்தரவு பொருந்தும் என்று தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் நிறைவேற்றுக்குழுவை கூட்ட முடியாது.

குண்டர்கள் கூட்டத்தைக் கூட்டி இடம்பெற்ற நிறைவேற்றுக்குழு சட்டத்துக்கு முரணானதாகும். அத்தோடு அதில் பங்கேற்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அதிகாரம் இல்லை. நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையிலேயே அவர் செயற்பட்டிருக்கின்றார். பதில் செயலாளர் துஷ்மந்த மித்ரபாலவும் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் செயற்பட்டுள்ளமைக்கு எதிராக நாம் சட்ட நடவடிக்கை எடுப்போம்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களே இதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர். பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு இவ்வாறு அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட முடியாது. முன்னாள் அமைச்சர் திலங்க சுமதிபால ஆட்சேபனையை வெளிப்படுத்திய போது அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# அதிபர், ஆசிரியர்கள் சம்பளப் பிரச்னை; குரல் எழுப்பினார் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு, ஏப். 25

அதிபர், ஆசிரியர்களின் சம்பள கோரிக்கை தொடர்பாக கல்வி அமைச்சு கவனம் செலுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி அரச பாடசாலை ஆசிரியர்கள் -அதிபர்கள் தொழிற்சங்க போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

அதிபர்,ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பு கோரிக்கையினை முன்வைத்து தொழிற்சங்க போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். இந்த நாட்டில் 2 இலட்சத்து 41 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் உள்ளனர். சுமார் 16 ஆயிரம் அதிபர்கள் உள்ளனர்.

ஆசிரியர் சேவை மற்றும் அதிபர் சேவையில் சம்பள பிரச்னையை காணப்படுகின்றது. அதிபர்-ஆசிரியர்களின் சம்பள கோரிக்கை தொடர்பாக பல பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் ஏப்ரல் 18 ஆம் திகதி கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரின் செயலாளரின் கையொப்பத்துடன் கடிதமொன்று வெளியிடப்பட்டது.

அதிபர், ஆசிரியர் சேவையில் சம்பளபிரச்னை இல்லை என்றே அவர் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். இது பாரிய பிரச்னையாகும்-என்றார். (அ)

# பொலிஸ் உத்தியோகத்தரின் மீது கண்ணாடி துண்டுகளால் தாக்கு!

கொழும்பு, ஏப். 24

காலி - களுவெல்ல பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மீது சந்தேகநபர் ஒருவர் உடைந்த கண்ணாடி துண்டுகளால் தாக்குதல் நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆயுதத்தால் ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டில் குறித்த சந்தேகநபரை கைது செய்வதற்கு காலி பொலிஸ் நிலையத்தின் உத்தியோகத்தர்கள் குழுவொன்று சென்றுள்ளது.

இதன்போதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த காலி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் சிகிச்சைக்காக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும், பின்னர் குறித்த சந்தேக நபரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளார். (அ)

# வேதன நிர்ணய சபையின் கூட்டத்தை புறக்கணித்த முதலாளிமார் சம்மேளனம்

கொழும்பு, ஏப். 25

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இரண்டாவது முறையாக இன்றைய தினம் இடம்பெற்ற வேதன நிர்ணயச் சபை கூட்டத்தை முதலாளிமார் சம்மேளனம் புறக்கணித்துள்ளது.

நேற்று முற்பகல் 10 மணிக்கு தேயிலை தொழிலாளர்களுக்கான வேதனம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக வேதன நிர்ணயச் சபை தொழில் ஆணையாளர் தலைமையில் கூடியிருந்தது. இறுதியாக கடந்த 10ஆம் திகதி வேதன நிர்ணயச் சபை கூடியது.

அன்றைய தினம் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான வேதனம் தொடர்பில் வாக்கெடுப்பு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

எனினும் முதலாளிமார் சம்மேளனம் குறித்த வாக்கெடுப்பை அன்றைய தினம் புறக்கணித்திருந்தது.

இந்த நிலையில் நேற்று இரண்டாவது தடவையாகவும் வேதன நிர்ணய சபை கூடியிருந்த நிலையில், முதலாளிமார் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் குறித்த கூட்டத்தை புறக்கணித்திருந்ததாக வடிவேல் சுரேஷ் எம்.பி. தெரிவித்தார்.

# அநுரவின் விவாதத் திகதியை நிராகரித்த சஜித் பிரேமதாச!

## புதிய திகதியும் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 25

**எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடனான விவாதத்திற்கு ஜே.வி.பி என்ற அரசியல் கூட்டணியான தேசிய மக்கள் சக்தி அறிவித்துள்ள திகதி குறித்து ஐக்கிய மக்கள் சக்தி பதிலளித்துள்ளது.**

அடுத்த மாதம் 7, 9, 13 மற்றும் 14ஆம் திகதிகளில் விவாதத்தை நடத்த தேசிய மக்கள் சக்தி தயாராக உள்ளதென நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை அறிவித்திருந்தது.

இந்நிலையில், பொருளாதார வல்லுநர்கள் மற்றும் தலைவர்களுக்கு இடையிலான இரண்டு விவாதங்களுக்கும் தாம் தயார் என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரமேதாசவும் நேற்று முன்தினமே பதிலளித்திருந்தார்.

தேசிய மக்கள் சக்திக்கு பதிலளித்திருந்த ஐக்கிய மக்கள் சக்தி, இரு கட்சிகளின் பொருளாதார கலந்துரையாடல்களுக்கு முன்னர் பொது விவாதம் ஒன்றையும் முன்மொழிந்துள்ளது.

மேலும் ஐக்கிய மக்கள் சக்தி இரண்டு பொது விவாதங்களுக்கான திகதிகளாக எதிர்வரும் 25 மற்றும் 26 ஆம் திகதிகளை பரிந்துரைத்துள்ளது. இதற்கமைய தேசிய மக்கள் சக்தி அறிவித்த திகதிகளுடன் குறித்த தினங்கள் பொருந்தாதுள்ளன.

இரு கட்சித் தலைவர்களுக்கிடையிலான விவாதத்திற்கு மாத்திரமே திகதிகள் முன்மொழியப்பட்டுள்ளதாக தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தி, பொருளாதார வல்லுநர்களுக்கிடையிலான விவாதத்திற்கு திகதிகள் முன்மொழியப்படாமை குறித்து கேள்வி எழுப்பியுள்ளது. (அ)

# ஜனாதிபதி வேட்பாளர்கள் 7 பேர்!

கொழும்பு, ஏப். 25

ஜனாதிபதி தேர்தலின் சூடு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கையும் 7 ஆக அதிகரித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அனுரகுமார திஸாநாயக்க, திலித் ஜயவீர, முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, பொது பயன்பாடுகள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் ரத்நா யக்க மற்றும் முன்னாள் ஜனாதி பதி ஜே.ஆர். ஜயவர்தனவின் பேரன் இஷான் ஜயவர்தன ஆகி யோர் போட்டியிட தீர்மானித்துள்ளனர்.

இதேவேளை, சுதந்திரக் கட்சியும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டும் என அக்கட்சியின் பதில் தலைவரும், நீதித்துறை சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சருமான கலாநிதி விஜயதாச ராஜபக்ச அண்மையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர் விஜயதாச ராஜபக்ச எதிர்வரும் சில வாரங்களில் கோரிக்கை தொடர்பான தனது முடிவை அறிவிப்பதாக தெரிவித்திருந்தார்.

இதேவேளை, பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது கட்சியின் மே தினக் கூட்டத்தில் அறிவிக்கப்படும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய, எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதித் தேர்தலில் மேலும் பல வேட்பாளர்கள் இணையவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன. (அ)

# ஒரு ஹெக்ரேயருக்கு ரூ.15,000 நிதி மானியம்

## விவசாயிகளுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானம்

கொழும்பு, ஏப். 30

2024 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கைகளுக்காக விவசாயிகளுக்கு நிதி மானியம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில், விவசாய மற்றும் பெருந்தோட்டகைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் கடந்த மார்ச் மாதம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது.

அதன்படி, இந்த ஆண்டு நெல் செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்ரேயருக்கு ரூபாய் 15,000 படி நிதி மானியம் வழங்கப்படவுள்ளது. இந்தப் பணத்தை பசளை வாங்குவதற்காகவோ அல்லது நெல் செய்கைக்கு தேவையான வேறு ஏதேனும் நோக்கத்துக்காகவோ பயன்படுத்திக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் இந்தப் பணம் தமக்கு கிடைக்கவில்லையென சில விவசாய அமைப்புக்களிடமிருந்து வந்த அறிக்கைகள் தொடர்பாக, அமைச்சர் மகிந்த அமரவீர நேற்று காலை கமநல அபிவிருத்தி திணைக்களத்திடம் கேட்டறிந்தார்.

இதன்பிரகாரம், ஏற்கனவே சிறுபோக நெற்செயற்கை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. ஆனால், தற்போதும் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் தொடர்பிலான தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கை இந்த வாரத்துக்குள் நிறைவடையும் என கமநல திணைக்களம் அறிவித்துள்ளது.

சிறுபோகப் பருவத்தில் 6 இலட்சம் ஹெக்ரேயரில் நெல் பயிரிடப்பட வேண்டும். ஆனால், தற்போதைய தகவலின்படி, 25,000 ஹெக்ரேயரில் மட்டுமே நெல் செய்ய முடிந்துள்ளது.

நெல் செய்கைக்கு பின்னரே பசளை இடப்படும். எனவே நெல் செய்கைக்குப் பின்னர் இந்த நிதி மானியத்தை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த வாரத்திலிருந்து விவசாயிகளின் வங்கிக் கணக்கில் குறித்த பணம் வைப்பிலிடப்படும் என கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் ஏ.எம்.எச்.எல் அபேரத்ன தெரிவித்துள்ளார். (அ)

# இரு ஆண்டுகளில் 25 இலட்சம் பேர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்

## அந்நியச் செலாவணியின் அளவு கணிசமாக அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 25

கடந்த 2022 மற்றும் 2023 ஆகிய இரண்டு ஆண்டுகளில் 2,565,365 இலங்கையர்கள் பல்வேறு காரணங்கள் நிமித்தம் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள காலாண்டு அறிக்கைகள் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, 2022 இல் 1,127,758 இலங்கையர்களும், 2023 இல் 1,437,607 இலங்கையர்களும் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர்.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மொத்த புலம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கையில் 24 வீதமானோர் மாத்திரம் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றுள்ளனர்.

இதன்படி, 2022 ஆம் ஆண்டில் 311,269 பேரும் 2023 ஆம் ஆண்டில் 297,656 பேரும் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றுள்ளனர்.

2023 ஆம் ஆண்டில் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்களில் 70 வீதமானோர் திறமையான மற்றும் தொழில்முறை பணியாளர்களாக இருப்பார்கள் என்று புள்ளிவிவரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களால் இலங்கைக்கு அனுப்பப்படும் அந்நியச் செலாவணியின் அளவு கணிசமாக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள காலாண்டு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, 2022ஆம் ஆண்டு மாத்திரம் வெளிநாட்டுப் பணியாளர்களால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட அந்நியச் செலாவணியின் அளவு 3,789.4 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

அத்துடன், 2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டு பணியாளர்கள் 5,969.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளனர்.

இதன்படி, குறித்த இரண்டு வருடங்களில் வெளிநாட்டு பணியாளர்கள் இலங்கைக்கு அனுப்பிய அந்நிய செலாவணியின் அளவு 9,759 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

# சிறைக் காவலர்கள் பலர் சேவையிலிருந்து விலகல்

கொழும்பு, ஏப். 25

சம்பள அதிகரிப்பு இல்லாமை, தொடர்ச்சியாக பணியாற்ற வேண்டிய நிலை உள்ளிட்ட பல பிரச்னைகளினால் சிறைக் காவலர்கள் பலர் சேவையிலிருந்து விலகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலை வரலாற்றில் இது போன்ற ஒரு பாரதூரமான பிரச்னை இதற்கு முன் எழுந்ததில்லை என்று தெரிவிக்கப்படுகிறது . இப் பிரச்னையால் நூற்றுக்கும் மேற்பட்ட ஒழுங்கு முறை அதிகாரிகள் சேவையை விட்டு வெளியேறி வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.உயர் அதிகாரிகள் கூட இந்த சம்பளப் பிரச்னையால் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதுடன் ஓய்வூதியத்துக்காக, சிரமங்கள், பிரச்னைகளை பொறுத்துக் கொண்டு பணியில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பெருமளவிலான சந்தேக நபர்கள் சிறையில் அடைக்கப்பட்டு வரும் இவ்வேளையில், அதிகளவான ஒழுங்குமுறை உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து விலகிச் செல்வது சிறைச்சாலை திணைக்களத்தினால் தாங்க முடியாத பிரச்னையாக மாறியுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# முல்லையில் மரக்கடத்தலில் ஈடுபட்ட வாகனம் விபத்து!

முல்லைத்தீவு, ஏப். 25

முல்லைத்தீவின் முள்ளியவளை பகுதியில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி மரக்கடத்தில் ஈடுபட்ட வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்து சம்பவம் நேற்று முன் தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

முள்ளியவளையில் இருந்து சட்டவிரோதமான முறையில் தேக்கமரக்குற்றிகளை ஏற்றிக் கொண்டு சென்று வாகனம் கேப்பாபிலவு இராணுவப் படைத்தளத்திற்கு முன்னால் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்திற்குள்ளாகியுள்ளது.



இதன்போது வாகனத்தில் பயணித்த சந்தேக நபர்கள் தப்பி சென்ற நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் குறித்த வாகனத்திலிருந்த பெறுமதி மிக்க தேக்கமரக் குற்றிகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர். (அ)

# எந்த அரசாங்கத்திலும் அமைச்சராகத் தயார்!

**மனோ கணேசன் அறிவிப்பு**

கொழும்பு, ஏப். 25

**அடுத்து ஆட்சி அமைக்கும் எந்தவொரு அரசாங்கத்திலும் தாம் அமைச்சராக பதவி வகிக்க உள்ளதாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**



ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமது அணியான ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் முன்னணி வகிப்பார்.

மேலும், எதிர்வரும் தேர்தலில் எந்த வேட்பாளர் ஜனாதிபதியாக வேண்டும் என்பதனை மக்கள் தீர்மானிப்பார்கள்.

நாட்டின் பிரதான கட்சிகளில் ஒன்றான தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமாரவும் எம் மீது நம்பிக்கை கொண்டு தமது அரசாங்கத்தில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளார்-என்றார். (அ)

# மின்னேரியா பகுதியில் நேற்று அமைதியின்மை!

கொழும்பு, ஏப். 25

பொலனறுவை - மின்னேரியா பகுதியில் மீனவர் ஒருவர் தாக்கிக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து, குறித்த பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது.

மின்னேரியா நீர்த்தேக்கத்தில் தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி மீன்பிடிக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த மீனவர் ஒருவர் ஆயுதங்களால் தாக்கிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் குறித்த நபரை கொலை செய்ததாக கூறப்படும் நபரின் வீடு மற்றும் சொத்துக்களுக்கு பிரதேச மக்கள் சேதம் விளைவித்ததையடுத்து அந்த பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது.

இதனையடுத்து, பொலிஸார் தலையிட்டு நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதுடன், சந்தேகநபர்களின் பிள்ளைகளையும் மின்னேரிய பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மின்னேரியா பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய நபர் ஒருவர் மின்னேரியா நீர்த்தேக்கத்தின் கரையோரத்தில் வைத்து தாக்கிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சமையல் எரிவாயு விலை மாற்றமடையும் சாத்தியம்

கொழும்பு, ஏப். 25

நாட்டில் எரிவாயு விலையில் மாற்றம் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக லிற்றோ சமையல் எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எரிவாயு ஏற்றுமதி செய்யும் நாடுகள் மத்தியில் நிலவி வரும் பதற்ற நிலை தணிந்தால், விலை குறையும் சாத்தியம் உண்டெனவும் அவர் கூறினார்.

இவ்வாறு சர்வதேச சந்தையில் விலை குறைவடைந்தால் அந்த நலன்களை நாட்டு மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# நடிகைக்கும் கணவருக்கும் பிணை!

கொழும்பு, ஏப். 25

பண மோசடி வழக்கு தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பிரபல சிங்கள நடிகை தமிதா அபேரத்ன மற்றும் அவரது கணவர் ஆகியோர் நேற்று புதன்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களை தலா 50 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவதாக கூறி பண மோசடி செய்து ஏமாற்றியமை தொடர்பில் கடந்த ஏப்ரல் 4ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கிளிநொச்சியில் மடு அன்னை





கிளிநொச்சி, ஏப். 25

மடுமாதாவின் முடிசூட்டு விழாவின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மடுமாதா திருச்சொரூபம் ஊர்வலமாக கடந்த வாரம் யாழ்.மாவட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் நேற்றுக் காலை அது கிளிநொச்சியை அடைந்தது.

கிளிநொச்சி அக்கராயன் ஆரோக்கியமாதா ஆலயத்துக்கு கொண்டு செல்லப்பட்ட மருத மடு மாதாவின் திருச்சொரூபத்தை அருட்தந்தை அல்பட் சேகர் தலைமையில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.



தொடர்ந்து விசேட வழிபாடு இடம்பெற்றதுடன், மாவட்டத்தின் பல பிரதேசங்களுக்கும் திருச்சொரூபப் பயணம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு மடுமாதாவின் திருச்சொரூபத்தை வழிபட்டு தமது வேண்டுதல்களை முன்வைத்தனர்.(அ)

# மத்தள சர்வதேச விமான நிலையத்தை தனியாருக்கு கையளிக்க நடவடிக்கை?

கொழும்பு, ஏப். 25

சர்வதேச விமான நிலையமான மத்தள விமான நிலையத்தின் நிர்வாகத்தை தனியாருக்கு மாற்றுவது தொடர்பான பிரேரணைக்கு ஒப்புதல் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறித்த பிரேரணையானது, இந்த வாரத்திற்குள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சகம் இது தொடர்பான அமைச்சரவை முன்மொழிவை ஏற்கனவே சமர்ப்பித்துள்ளது.

தொடருந்து திணைக்கள பொது முகாமையாளரின் மரணத்தில் சந்தேகம்

தொடருந்து திணைக்கள பொது முகாமையாளரின் மரணத்தில் சந்தேகம் இந்நிலையில், சீனாவிடம் பெற்ற 307 மில்லியன் அமெரிக்க டொலர் கடனில் கட்டப்பட்ட மத்தள விமான நிலையமானது பெரும் நட்டத்தில் இயங்கி வருகிறது.

எனவே, இதன் நிர்வாகத்தை தனியாருக்கு மாற்றுவது தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, இந்த விமான நிலையமானது தற்போது ரஷ்யா மற்றும் சில மத்திய ஆசிய நாடுகளில் இருந்து சுற்றுலா விமானங்கள் வந்து செல்ல பயன்படுகிறமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தூதரக சேவையில் மாற்றம்

கொழும்பு, ஏப். 25

வெளிவிவகார அமைச்சின் தூதரக அலுவல்கள் பிரிவு எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி முதல் பத்தரமுல்லை - சுஹூருபாய நிர்வாக கட்டடத்துக்கு மாற்றப்படவுள்ளது.

குறித்த தினத்திலிருந்து, புதிய அலுவலகத்தில் வழமையான அலுவலக நேரங்களில் சகல தூதரக சேவைகளும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அதேநேரம், கொழும்பிலுள்ள தூதரக அலுவல்கள் பிரிவினால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஆவண அத்தாட்சிப் படுத்தல் சேவைகள், எதிர்வரும் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் தற்காலிகமாக இடைநிறுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தக் காலப்பகுதியினுள் பிராந்திய அலுவலகங்களில் சேவைகளை பெறமுடியுமென வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

# ஹரக் கட்டாவின் கைக்கு சென்ற அங்கொட லொக்காவின் சொத்து

கொழும்பு, ஏப். 25

அங்கொட லொக்காவின் கோடிக்கணக்கான சொத்துக்கள் மற்றும் துப்பாக்கிகள் பாதாள உலக தலைவர் ஹரக் கட்டாவின் கைகளுக்கு சென்றுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் வெளிப்படுத்தியுள்ளனர்.

அங்கொட லொக்காவின் மரணத்தின் பின்னர் 25 புதிய துப்பாக்கிகள் மற்றும் கோடிக்கணக்கான சொத்துக்கள் ஹரக் கட்டாவின் பெயரில் மாற்றப்பட்டுள்ளது.

பாகிஸ்தானிய போதைப் பொருள் வலையமைப்பிடம் இருந்து பெறப்பட்ட ஹெரோயினுடன், கைத்துப்பாக்கிகளும் அங்கொட லொக்காவின் தரப்புக்கு அனுப்பப்பட்டுள்ளமையும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தியாவில் அங்கொட லொக்கா உயிருடன் இருப்பதாக நம்ப வைத்து அவரது நெருங்கிய உதவியாளர்களுக்கு குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டு குறித்த கும்பலின் ஆயுதங்கள், போதைப்பொருள், பணம் என்பன அபகரிக்கப்பட்டுள்ளமை தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில் அங்கொட லொக்காவின் கும்பலிடம் இருந்து கடத்திச்செல்லப்பட்ட ஆயுதங்களை கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் தெரிய வந்துள்ளது. (அ)

# ஐ. நா. திட்ட உயர் அதிகாரி மட்டக்களப்புக்கு விஜயம்

மட்டக்களப்பு, ஏப். 25

**மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதன் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட, இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி அவுஸ்சா குபோட்டா விற்கிடையிலான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட செயலத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றுள்ளது.**

இதன்போது மாவட்டத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தினுடாக மேற்கொள்ளப்பட்டு வரும் செயல் திட்டங்களான ஐந்தாண்டு திட்டம் மற்றும் வீடமைப்பு திட்டங்கள் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்போது மாவட்டத்தில் அபிவிருத்தி செய்வதற்கு தேவையான விடயங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட வதிவிட பிரதிநிதிக்கு பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆர். ஜதிஸ்குமாரினால் அளிக்கை செய்யப்பட்டது.

மேலும் காலநிலை மாற்றத்தினால் மாவட்டத்தில் ஏற்படும் வெள்ள பாதிப்பு, களப்பினை தூர் வாருதல், பாடசாலையில் மாணவர் இடைவிலகள், சிறு குளங்களை புணரமைத்தல், விவசாயிகளுக்கான நெல் உலர்த்தும் இயந்திரத்தின் தேவை மற்றும் பல முக்கிய விடயங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# ஒரு துண்டு காணியைக்கூட முஷாரப் விடுவிக்கவில்லை

## அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்

பொத்துவில், ஏப். 25

பொத்துவில் பிரதேச மக்களுக்காக ஒரு துண்டுக் காணியையேனும் பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் பெற்றுக்கொடுக்கவில்லை என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர் ஏ. எம். தாஜுதீன் தெரிவித்துள்ளார்.

பொத்துவிலை பொறுத்தவரை செங்காமம், துக்வெல்ல, உடம்பன்குளம், தகராம்பெல, ஆமவெட்டுவான், கிராண் கோவை மற்றும் சோனிகம உள்ளிட்ட மேலும் பல பகுதிகளில் காணிப் பிரச்னை உள்ளது. இந்தப் பிரச்னைகள் எல்லாம் தீர்க்கப்பட்டுள்ளனவா? அல்லது ஒரு துண்டு நிலத்தைக்கூட முஷாரப் எம்.பியால் விடுவிக்க முடிந்ததா?

பொத்துவில் பிரதேசத்தில் அபிவிருத்தி நடைபெறுவதாகக் கூறுவது அப்பட்டமான பொய். பொத்துவில் மக்கள் எதிர்பார்த்த எந்தவொரு அபிவிருத்தி பணிகளும் முஷாரப் எம்.பியால் செய்யப்படவில்லை.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியை பொறுத்தவரையில் அது பொத்துவில் மக்களின் தாகத்தை தீர்த்த கட்சியாகும். அந்த வகையில் பொத்துவிலில் வாழ்கின்ற அனைத்து மக்களும் அந்தக் கட்சிக்கு விசுவாசமாக இருக்கின்றனர் - என்றார். (ஐ)

# போதைப்பொருளுடன் கைதான கணக்காளர் தடுப்புக் காவலில்

அம்பாறை, ஏப். 25

நீண்ட காலமாக போதைப்பொருள் விநியோகம் மற்றும் பயன்பாட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் கைதான சந்தேக நபரான கணக்காளரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 28 ஆந் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

கைதான குறித்த சந்தேக நபரை ஆஜர்படுத்திய வேளை மேற்கண்டவாறு 05 நாட்கள் தடுப்பு காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சந்தேக நபரான கணக்காளர் நீண்ட காலமாக போதைப்பொருள் விநியோகம் மற்றும் பயன்பாட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் மருதமுனை பகுதியில் வைத்து பெரிய நீலாவணை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

அண்மையில் மருதமுனை நகரை அண்டிய பகுதியில் ஐஸ் மற்றும் கஞ்சா போதைப்பொருளுடன் கைதான சந்தேக நபரின் வாக்குமூலத்தை அடிப்படையாக கொண்டு பெரிய நீலாவணை பொலிஸார் குறித்த கணக்காளரை கைது செய்ய துரித விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது கணக்காளர் வசம் இருந்து ஐஸ் போதைப்பொருள் 840 மில்லி கிராம் கேரளா கஞ்சா 4 கிராமும் 540 மில்லி கிராமும் மீட்கப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும் குறித்த சந்தேக நபர் கடந்த காலங்களில் கல்முனை மாநகர சபையின் முன்னாள் கணக்காளராக பணியாற்றியவர் என்பதுடன் தற்போது அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கணக்காளராகவும் தற்போது பணியில் இருப்பவர் என பொலிஸ் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள 39 வயதான சந்தேக நபரான கணக்காளரான கமறுத்தீன் முஹம்மது நியாஸிடம் மேலதிக விசாரணைகளை பெரிய நீலாவணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# அம்பாறை அரச அதிபர் முன்னிலையில் சுவாமி விபுலானந்தர் ஆண்டு பிரகடனம்!

அம்பாறை, ஏப். 25

காரைதீவில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம முன்னிலையில் சுவாமி விபுலானந்தர் ஆண்டு நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை சித்ரா பௌர்ணமியில் பிரகடனம் செய்யப்பட்டது.



விபுலானந்த அடிகளார் துறவறம் பூண்டு நேற்று முன் தினம் 100 ஆண்டுகள் ஆகின்றன.

1924 ஆம் ஆண்டு சித்ரா பௌர்ணமியில் இகிமி.சுவாமி சிவானந்தரிடம் ஞான உபதேசம் பெற்று பண்டிதர் மயில்வாகனன் சுவாமி விபுலானந்தர் ஆனார்.

நேற்றுமுன்தினம் சிறப்பாக இடம்பெற்ற நூற்றாண்டு விழா அங்குரார்ப்பண வைபவம் இந்து சமய கலாசார அலுவலகள் திணைக்கள பணிப்பாளர் ய.அனிருத்தனன் தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக நந்திக் கொடி ஏற்றி சுவாமிகளின் இல்லத்தில் விசேட பூஜை இடம் பெற்று நூற்றாண்டுவிழா பதாதை அதிதிகளால் திறந்து வைக்கப்பட்டது.

திருமுன்னிலை அதிதியாக இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக்கான தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மாநந்தா ஜீ மகராஜ் கலந்து ஆசியுரை வழங்கி சிறப்பித்தார்.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் வரவேற்புரையாற்றினார்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பு இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் நூற்றாண்டு விழா பிரகடனத்தை வாசித்தளித்தார்.

அப்போது அதிதிகளுக்கு விபுலானந்தரின் வரலாற்று படங்கள் வழங்கப்பட்டன. பிரகடன பிரசுரங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (அ)

# சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் சர்வமத நல்லிணக்க விருந்துபசாரம்

அம்பாறை, ஏப். 25

தமிழ்,சிங்கள புத்தாண்டு மற்றும் ரமழான் பண்டிகையை யொட்டி சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் சர்வமத நல்லிணக்க விருந்துபசார நிகழ்வு நேற்று முன் தினம் சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் நடைபெற்றது.



சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் மேற்படி பிரதேச செயலகத்தில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் இணைந்து இந்த விருந்துபசார நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தனர்.

மேற்படி நிகழ்வில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயரத்தன, உதவி பிரதேச செயலாளர் யூ.எல் அஸ்லம் ,சம்மாந்துறை பொலிஸ் நிலைய குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி யு.எல் ஏ.எம் நௌபர்,மல்வத்தை கமநல சேவை பொறுப்பதிகாரி, நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம் ஜெமில், சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளார் எம்.பி.எம் ஹுஸைன் சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம். முஹம்மட்,மேலதிக மாவட்ட பதிவாளர் ஏ.கே.ரினோஸா ,கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எல்.எம்.தாஸீம், உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் இந் நிகழ்வில் பாரம்பரிய உணவு வகைகளை உத்தியோகத்தர்கள் பரிமாறி மகிழ்ந்தனர்.என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேச மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் பயிற்சி



மட்டக்களப்பு, ஏப். 25

கல்வி அமைச்சரின் புதிய சிந்தனையில் கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சை எழுதி பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களுக்கான மூன்றாம் நிலை கல்வியை மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதேச செயலகங்களினூடாக ஊடாக முன்னெடுத்துச் செல்லப்படும் தொழில் வழிகாட்டல் பயிற்சி மட்டக்களப்பு தொழில் நுட்பக் கல்லூரியில் அதிபர் சோமசூரியம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இதன் போது மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகவும் பினதங்கிய முனைக்காடு, முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவு போன்ற பிரதேச பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டனர். (அ)

# அபாயகரமான போர் மண்டலம் காஸாமீது மீண்டும் தாக்குதல்!

## ஹமாஸ் அமைப்புக்கு எதிராக போர் பிரகடனம் மக்களை உடன் வெளியேற இஸ்ரேல் உத்தரவு

ஜெருசலேம், ஏப். 25

" நீங்கள் மிகவும் அபாயகரமான போர் மண்டலத்தில் இருக்கின்றீர்கள். உங்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ள உடனடியாக வெளியேறிவிடுங்கள்." - இவ்வாறு இஸ்ரேல் பாதுகாப்புப் படைகளின் செய்தித் தொடர்பாளர் அவிச்சே அட்ரே அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஒக்போடர் மாதம் இஸ்ரேல் நாட்டுக்குள் அத்துமீறி நுழைந்த ஹமாஸ் அமைப்பினர் கண்மூடித்தனமாக பலரைச் சுட்டுக்கொன்றனர். மேலும் 200 இற்கும் மேற்பட்டோரை பணயக் கைதிகளாகப் பிடித்துச் சென்றனர்.

இந்தக் கொடூரச் சம்பவத்தால் ஆத்திரமடைந்த இஸ்ரேல், ஹமாஸ் அமைப்புக்கு எதிராகப் போர் பிரகடனம் செய்து காஸா மீது தாக்குதல் நடத்தியது. கடந்த ஏழு மாதங்களாக காஸா மீது கடும் தாக்குதல் நடத்தி



வரும் இஸ்ரேல் காஸா எல்லையின் வடக்கிலுள்ள பெய்ட் லஹியா நகரத்தில் வசிக்கும் பொது மக்கள் விரைந்து அந்த பகுதியிலிருந்து வெளியேற உத்தரவிட்டுள்ளது.

புதிய திட்டமிடலின் கீழ் பெய்ட் ஹியாவிலுள்ள ஹமாஸ் உட்கட்டமைப்பு பகுதிகள் மீது கடுமையான தாக்குதல் நடத்தப்படவுள்ளதால் இந்த அறிவிப்பை இஸ்ரேல் பாதுகாப்புப் படைகளின் செய்தித் தொடர்பாளர் தனது அதிகாரபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். (எ)



# அதிகாலையில் அதிர்ந்த மணிப்பூர் மூன்று இடங்களில் குண்டுவெடிப்பு

இம்பால், ஏப். 25

இந்தியாவின் மணிப்பூர் மாநிலம் காங்போகி மாவட்டத்தில் மக்களவைத் தேர்தல் நடந்து முடிந்த சில நாட்களுக்குப் பின்பு மாவட்டத்தின் சபர் மீனாவிலுள்ள தேசிய நெடுஞ்சாலையிலுள்ள பாலத்தில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் மூன்று இடங்களில் குண்டுகள் வெடித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மணிப்பூரின் வெளிப்புறத் தொகுதிகளுக்கு நாளை 26 ஆம் திகதி இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. இந்நிலையில் இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நடந்துள்ளன.

இதுதொடர்பில் பாதுகாப்பு அதிகாரிகள் கூறுகையில், இன்று அதிகாலை மூன்று இடங்களில் குண்டுகள் வெடித்தன. இச்சம்பவத்தில் யாருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. இருப்பினும் இம்பால் பள்ளத்தாக்குக்கு அத்தியாவசியப் பொருட்கள் கொண்டு செல்லும் முக்கியமான வீதி பாதிக்கப்பட்டுள்ளது.

குண்டு வெடிப்பு நடந்த பகுதி பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அதிகாரிகள் கூறினர்.



# புழுதியை கொண்டு வந்த காற்று ஓரேஞ்சாக மாறிய ஏதென்ஸ் நகர்

ஏதென்ஸ், ஏப். 25

ஆபிரிக்காவின் சகாரா பாலைவன புழுதிகளால் கிரேக்கத்தின் ஏதென்ஸ் உட்பட பல நகரங்கள் ஓரேஞ் நிறத்துக்கு மாறியுள்ளன.

மத்தியதரை கடலில் காணப்பட்ட தூசுமேகங்கள் கிரேக்கத்தின் வரலாற்று புகழ்மிக்க பல நகரங்களைச் சூழ்ந்துகொண்டதால் தெற்கு கிரேக்கத்தின் மீதான வானம் திடீரென ஓரேஞ்ச் நிறத்துக்கு மாறியது.

இதேவேளை, கடும் காற்று காரணமாக கிரேக்கத்தின் தென் பகுதிகளில் காட்டுத் தீ பரவியுள்ளது.

அங்கு நேற்றுக்காலை 10 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் 25 காட்டுத் தீ அனர்த்தம் ஏற்பட்டதாக தீயணைப்புப் பிரிவினர் தெரிவித்தனர். (எ)

# "தேசத்துக்காக மாங்கல்யத்தை தியாகம் செய்தவர் எனது தாய்"

பெங்களூரு, ஏப். 25

தேசத்துக்காக மாங்கல்யத்தை தியாகம் செய்தவர் தனது தாய் என காங்கிரஸின் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி தெரிவித்தார்.

இந்தியாவின் பெங்களூருவில் செவ்வாய்க்கிழமை நடந்த காங்கிரஸியின் பொதுக்கூட்டத்தில் உரையாற்றியபோதே பிரியங்கா இவ்வாறு குறிப்பிட்டார்.

"தற்போது நாட்டு மக்களின் சொத்துக்கள்மீதும் காங்கிரஸ் கண் வைத்திருக்கிறது. அந்தக் கட்சி மத்தியில் ஆட்சி அமைத்தால் மக்களின் சொத்துக்கள், வீடுகள் அபகரிக்கப்படும். கொள்ளையடிப்பதை தங்களின் பிறப்புரிமையாக காங்கிரஸ் கருதுகிறது " இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி



தேர்தல் பரப்புரையின் போது குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், மோடியின் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்துள்ள காங்கிரஸ் பொதுச் செயலாளர் கூறுகையில்

"நாம் ஏன் இராமரை வணங்குகிறோம். நேர்மையான வழியில் பயணித்து அவர் மக்களுக்காக சேவை செய்தவர் என்பதால். மகாத்மா காந்தியும் அதே வழியைத் தெரிவு செய்து பயணித்தவர். அவரைத் துப்பாக்கி குண்டுகள் துளைத்த போதும் 'ஹே ராம்' என்று தான் சொன்னார்.

ஆனால், இன்று நிலையே வேறு. பொய்கள் எங்கும் நிறைந்துள்ளன. அன்றாடம் ஏதேனும் ஒரு நாடகம் அரங்கேறுவதை நாம் பார்த்து வருகிறோம்.

போரின் போது தேசத்துக்காக தனது தங்கத்தை கொடுத்தவர் இந்திரா காந்தி. மாங்கல்யத்தை தியாகம் செய்தவர் எனது தாய் சோனியா காந்தி.

பெண்களின் போராட்டத்தை பா. ஜ. க.வினரால் புரிந்து கொள்ள முடியாது. அது புரிந்திருந்தால் பிரதமர் மோடி அப்படி பேசியிருக்க மாட்டார்." என்றார் பிரியங்கா. (எ)

# பலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டங்களால் அதிரும் அமெரிக்க பல்கலைக்கழகங்கள்

நியூயோர்க், ஏப். 25

அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் இஸ்ரேலுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தீவிரமடைந்துள்ளதைத் தொடர்ந்து கொலம்பிய பல்கலைக்கழகம் வகுப்பறை கற்றல் செயல்பாடுகளை இடைநிறுத்தியுள்ளது. நியூயோர்க் பல்கலைக்கழகத்திலும் யால் பல்கலைக்கழகத்திலும் பல ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை அமெரிக்காவின் பல பல்கலைக்கழகங்கள் ஹமாசுக்கு எதிரான இஸ்ரேலின் யுத்தத்தால் உருவாகியுள்ள பதற்றத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்



ளன.

கொலம்பிய பல்கலைக்கழகத்தின் வெளியே முகாமிட்டிருந்த 100 இற்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, கொலம்பிய பல்கலைக்கழகத்தில் பதற்ற நிலை அதிகரித்து வருகிறது. (எ)

# வன்முறை - தீவிர சித்தாந்தம்மீது ஈர்ப்பு 15 முதல் 17 வயதுடைய ஏழு பேர் கைது

சிட்னி, ஏப். 25

மத ரீதியாகத் தூண்டப்பட்ட வன்முறை - தீவிர சித்தாந்தத்தால் ஈர்க்கப்பட்டிருந்த 15 முதல் 17 வயதுடைய ஏழு பேர் கைது செய்யப்பட்டனர்.

அவுஸ்திரேலியாவின் சிட்னி தேவாலயத்தில் நடந்த கத்திக் குத்து சம்பவத்தைத் தொடர்ந்து சிட்னியின் பல பகுதிகளில் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவினர் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தத் தேடுதல் நடவடிக்கையின் போது ஏழு இவ்வாறு பேர் கைது செய்யப்பட்டனர்.

சிட்னியின் 13 இடங்களில் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்றன. இதில் 15, 16, 17 வயதுடைய ஏழு பேர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் கூறினர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் ஒருவருக்கொருவர் நன்கு அறிமுகமானவர்கள். பொதுவான நோக்கத்துக்காக இணைந்திருந்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் இவர்களால் சமூகத்துக்கு உடனடி ஆபத்து இல்லை என பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். (எ)

# பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் மே தினத்தன்று அறிவிக்கப்படுவார்!

## பொரளை கம்பல் மைதானத்தில் கூட்டம்

கொழும்பு, ஏப். 24

**பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது எதிர்வரும் மே தினத்தன்று நடைபெறவுள்ள பேரணியில் அறிவிக்கப்படும் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

பொதுஜன பெரமுனவின் மே தினப் பேரணி கொழும்பு பொரளை கம்பல் மைதானத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொதுஜன பெரமுனவின் பல அமைச்சர்கள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க ஏற்கனவே தீர்மானித்துள்ளதுடன், ஏனையோர் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட உள்ளவருக்கு ஆதரவளிக்க உள்ளதாக அறிவித்துள்ளனர்.

பிரசன்ன ரணதுங்க, பியல் நிஷாந்த, காஞ்சன விஜேசேகர மற்றும் பொதுஜன பெரமுனவின் இளைஞர்கள் பலர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும், நாமல் ராஜபக்ஷ, சாகர காரியவசம் உள்ளிட்ட குழுவினர் இதற்கு எதிராக களமிறங்கத் தீர்மானித்துள்ளதாகவும் கட்சி வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. (அ)

# மைத்திரிபாலவுக்கு மற்றுமொரு தடை!

கொழும்பு, ஏப். 25

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை வகிப்பதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று மற்றுமொரு தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

அதன்படி அக்கட்சியின் முன்னாள் செயற்குழு உறுப்பினர் மொன்டேக் சரத் சந்திரா தாக்கல் செய்த முறைப்பாடு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இவ்வாறு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி முறைமை நீக்கப்பட்டதன் பின்னர் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்பட்டமை சட்டவிரோதமானது எனக் கூறி அவர் இந்த முறைப்பாட்டை தாக்கல் செய்திருந்தார்.

முன்னதாக, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம், முன்னாள் ஜனாதிபதி சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை வகிப்பதற்கு தடை உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சத்திய சோதனை நாடகம் நாளை யாழ். திருமறைக் கலாமன்றத்தில்

யாழ்ப்பாணம், ஏப். 25

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் தயாரிப்பில் பேராசிரியர் சி.ஜெய்சங்கரின் நெறியாள்கையில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின்"சத்திய சோதனை" என்னும் நாடகம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு இல.286,பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

நடைமுறைக் கல்வி பற்றிய கேள்வியையும் பொருத்தமான கல்வி முறையின் தேவை பற்றியும் உரையாடலைத் தூண்டும் நாடகமாக இது அமைந்துள்ளது.

நாடக ஆற்றுகையைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. (அ)

# சஜித் - அநுரகுமார விவாதம் நடத்துவதற்கு நாங்கள் தயார்!

## சட்டக்கல்லூரி மாணவர் ஒன்றியம்

கொழும்பு, ஏப். 25

தேசிய மக்கள் சக்திக்கும், ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையிலான விவாதத்தை நடத்துவதற்கு தமது சங்கம் தயாராக இருப்பதாக சட்டக்கல்லூரி மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான விவாதத்தை சட்டக்கல்லூரி வளாகத்தில் நடத்தவும், அதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க விருப்பம் தெரிவித்து அக்கட்சிகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் கட்சிக்கும் இடையில் நடைபெறவுள்ள விவாதத்தை சட்டக்கல்லூரியில் நடத்துமாறு தமது சங்கம் இரு கட்சிகளின் தலைவர்களிடம் முன்மொழிந்துள்ளதாக இலங்கை சட்டக்கல்லூரி மாணவர் சங்கத்தின் தலைவர் நவோத் ரத்னசேகர தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்திக்கும், ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் தலைவர்களின் இந்த விவாதத்தின் ஊடாக இலங்கை எதிர்நோக்கும் சவால்களை வெற்றி கொள்வதற்கு முன்வைக்கும் பொருளாதாரக் கொள்கைகள் குறித்து பொதுமக்களுக்கு தெரியப்படுத்த வாய்ப்புள்ளதாக சட்டக்கல்லூரி மாணவர் ஒன்றியத்தின் தலைவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# தேசிய மக்கள் சக்தியினர் மக்கள் மத்தியில் பிரபல்யம்

## அநுரவிடம் கூறிய சீன அமைச்சர்

கொழும்பு, ஏப். 25

தேசிய மக்கள் சக்தி மக்கள் மத்தியில் பிரபல்யமடைந்துள்ளதாக கூறியுள்ள சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச பிரிவுப் பிரதிநிதியும் அமைச்சருமான ஷன் ஹயன் தலைமையிலான குழுவினர் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பு மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது தேசிய மக்கள் சக்தி அரசியல் ரீதியில் துரிதமாக வளர்ச்சியடைந்து மக்கள் மத்தியில் பிரபல்யமடைந்துள்ளதாக சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச விவகாரத் திணைக்களத்தின் பிரதி அமைச்சர் ஷன் ஹய்ன் தலைமையிலான குழுவினர் அநுரகுமாரவிடம் தெரிவித்துள்ளனர்.

இந்த சந்திப்பின்போது நடப்பு அரசியல் நிலைமை, எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேர்தல்கள் மற்றும் வளர்ந்து வரக்கூடிய அரசியல் நிலைமைகள் பற்றி குறிப்பாக இருதரப்பினர்களிடையே கலந்துரையாடப்பட்டன.

தேர்தல் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் தயார்நிலை, அதன்பொருட்டு கடைப்பிடிக்க எதிர்பார்த்துள்ள வழிமுறைகள் மற்றும் உபாய மார்க்கங்கள் பற்றியும் தோன்றியுள்ள நெருக்கடியான நிலைமையிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக முதலில் அரசியல் உறுதிநிலையை நாட்டில் உருவாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

தேசிய மக்கள் சக்தி அரசியல் துறையில் வேகமாக வளர்ந்துவந்து மக்கள் மத்தியில் பிரபல்யத்தையும் கவர்ச்சியையும் அடைகையில் கடைப்பிடித்த வழிமுறைகள் மற்றும் அமைப்பாண்மைக் கட்டமைப்புகள் தொடர்பிலும் சீனத் தூதுக்குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

பல்வேறு மக்கள் குழுக்கள், சமூக அடுக்குகள் மற்றும் வெளிநாடு சென்றுள்ள இலங்கையர்களுடன் நிலவுகின்ற உறவுகள், நாட்டைக் கட்டியெழுப்புகையில் தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகள், கட்சிக் கட்டமைப்புகள் பற்றி தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் இவ்வேளையில் சீனத் தூதுக்குழுவினரிடம் வலியுறுத்தினர்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் கொண்டுள்ள பரஸ்பர நம்பிக்கை, சமூக கலாசார உறவுகள் மற்றும் ராஜதந்திர உறவுகளை தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின்கீழ் மேலும் வளர்த்துக்கொள்வது மற்றும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்கையில் மேற்படி உறவுகளைப் பிரயோகிக்கக்கூடிய விதங்கள் பற்றியும் இருதரப்பினருக்கும் இடையில் மேலும் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இச் சந்திப்பில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச விவகார திணைக்களத்தின் பிரதி அமைச்சரும் அக்கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினருமான ஷன் ஹய்ன், சீன கம்யூனிஸ கட்சியின் சர்வதேச விவகார திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் நாயகம் லின்தோ, கொழும்பிலுள்ள சீன தூதரகத்தின் கவுன்ஸிலர் சென் சியன்ஜியான், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச விவகார திணைக்களத்தின் பணிப்பாளர் லி ஜின்யன், பிரதி பணிப்பாளர் வென் ஜின், பிரதி அமைச்சின் செயலாளர் ஜின் வன், கொழும்பிலுள்ள சீன தூதரகத்தின் இரண்டாம் செயலர் ஜின் என்ஸ் மற்றும் மொழிபெயர்ப்பாளர் சாங் குயு ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# சுற்றுலா பயணிகள் வருகை ஏப்ரல் மாதம் சற்றுக் குறைவு

கொழும்பு, ஏப். 24

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு பின்னர் சுற்றுலாப் பயணிகளின் வருகை தொடர்ந்து அதிகரித்து வந்தது. இந்நிலையில், ஏப்ரல் மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்துள்ளது.

ஏப்ரல் முதல் மூன்று வாரங்களில் மொத்தம் 107,124 சுற்றுலாப் பயணிகளே நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக தரவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

இந்த எண்ணிக்கையை ஆண்டின் முதல் மூன்று மாதங்களுடன் ஒப்பிடும்போது, ஒரு மந்த நிலையை காட்டுகிறது.

ஏப்ரல் மாதத்தில் 100,000 சுற்றுலாப் பயணிகள் மூன்று வாரங்களில் வருகை தந்துள்ளனர்.

நாளாந்த வருகை சராசரி 5,100 என்ற அளவில் குறைந்துள்ளது. அதே நேரத்தில் வாராந்தம் சராசரி வருகை 35,000 ஆக குறைந்தது.

எனினும், இந்த மந்தநிலை அசாதாரணமானது அல்ல, மாதாந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை போக்குகளைப் பார்க்கும்போது, தொற்று நோய்க்கு முன்பே, முதல் காலாண்டில் ஒரு உயர்வுக்குப் பிறகு, ஏப்ரல் மாதத்தில் மந்த நிலை காணப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் ஆரம்பமாவதற்கு முன் வரும் இரண்டு மாதங்களில் வேகம் மேலும் குறையும்.

ஏப்ரல் மாதத்தில் மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 17 வீதமானவர்கள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர்.

இதேவேளை, 11 சதவீதமானவர்கள் ரஷ்யாவிலிருந்து வருகை தந்துள்ளதோடு, 10 வீதமானவர்கள் பிரித்தானியாவிலிருந்து வருகை தந்துள்ளனர். (அ)

# பாராளுமன்ற உறுப்பினராக வீரசேன சத்தியப்பிரமாணம்!

கொழும்பு, ஏப். 25

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் உறுப்பினராக வீரசேன கமகே நேற்று புதன்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

பொதுஜன பெரமுனவை அநுராதபுர மாவட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர் கே.எச். நந்தசேன உயிரிழந்துள்ளமையின் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்துக்கே வீரசேன கமகே இவ்வாறு நியமிக்கப்பட்டார்.

1991 இல் அரசியல் நடவடிக்கைளை ஆரம்பித்து சுதந்திரக் கட்சியில் கெக்கிராவ பிரதேச சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட அவர் அதன் எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்பட்டுள்ளார்.

அதனையடுத்து, வட மத்திய மாகாண சபை தேர்தலில் மக்கள் முன்னணியில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்ட வீரசேன கமகே, அதிக தடவைகள் பதில் முதலமைச்சராக செயல்பட்டுள்ளார். அத்துடன், வட மத்திய மாகாண சபையில் தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் பதவியையும் வகித்துள்ளார். (அ)

## கோட்டாவுக்கு...

இனத்தவர்களே தன்னை விரட்டிய டித்தனர் என்று குறிப்பிட்டுள்ளார். அவர் வரலாற்றை தெரிந்துகொள்ள வேண்டும். சிங்கள மன்னர்கள் காலத்தில் இருந்து முஸ்லிம் மக்கள் மன்னர்களை காட்டிக்கொடுக்கும் வகையில் நடந்து கொண்டதில்லை. இதனை சிறுபான்மை மக்களின் சூழ்ச்சியென்றே கூறுகின்றார். இவை கோட்டாபய தனது பாவத்தை கழுவிக்கொள்வதற்காக கூறும் பொய்யா கும். சிறுபான்மை மக்களால் அவரை விரட்டியடிக்க முடியுமா?

2019 ஜனாதிபதி தேர்தல் மேடையில் நாட்டை தன்னாலேயே மீட்க முடியும் என்றும், சிறுபான்மை மக்களுக்கு எதிராக கருத்துக்களை வெளியிட்டு இனவாதத்தை பரப்பியே அவர் ஆட்சிக்கு வந்தார். ஆனால், இறுதியில் அவரின் பாதுகாப்பைக்கூட அவரால் உறுதிப் படுத்த முடியாமல் போனது. சிங்கள மக்களின் வயிற்றிலும் அவர் அடித்தார். இதனைத் தொடர்ந்தே போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. எரிபொருள், எரிவாயு பிரச்னைகளால் மக்கள் போராட்டம் நடத்தினர். அதில் சிறுபான்மை மக்களும் கலந்து கொண்டார்கள்.

கோட்டாபயவுக்கு ஏற்பட்டது இறைவனின் சாபம் என்ற நான் நினைக்கிறேன். சடலங்களை எரித்து முஸ்லிம் மக்களின் உள்ளங்களை புண்படுத்தினார் - என்றார்.

## ரூ.1700...

கூட்டத்திலும் பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் பங்கேற்கவில்லை.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 20 வீத சம்பள அதிகரிப்பே வழங்கமுடியும். தேயிலை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி மற்றும் உலக சந்தையில் தேயிலைக்கான கேள்வி குறைவடைந்துள்ளதால் தேயிலை துறைக்கு ஏற்பட்டுள்ள சவால்கள் என்பனவற்றின் அடிப்படையில் இந்த சம்பள அதிகரிப்பை வழங்குவது சாத்தியமற்றது - என்றும் கூறியுள்ளது. (ஐ)

## இலங்கை அரசும்...

தடுப்பில் பல உயிரிழப்புகள் இடம்பெற்றன. பல சம்பவங்கள் ஒரே மாதிரியானவையாக காணப்பட்டன என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தனது வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

குற்றம் இடம்பெற்ற பகுதிக்கு விசாரணைக்காக சந்தேக நபர்களை பொலிஸார் கொண்டு சென்றவேளையே பல கொலைகள் இடம்பெற்றன என தெரிவித்துள்ள அமெரிக்க இராஜாங்க திணைக்களம், விசாரணையின்போது சந்தேக நபர்கள் தங்களை தாக்கிவிட்டு தப்பியோட முயற்சித்தனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளது.

கடந்த வருடம் 10 ஆம் திகதி தேசிய தொழில் பயிற்சி நிறுவகத்தின் உதவி முகாமையாளர் ஏ.ஜி.சமந்த பிரீத்தி குமார 15 கிராம் ஹெரோயினை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். தாங்கள் விசாரணை செய்த வேளை அவர் வன்முறையான விதத்தில் நடந்துகொண்டார். பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை தாக்கினார். உடைந்த போத்தலால் தாக்கினார் என தெரிவித்துள்ள இலங்கை பொலிஸார், பொலிஸாருடனான கைகலப்பின்போது அவர் உயிரிழந்தார் என தெரிவித்தனர் எனவும் அமெரிக்கா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

எனினும் மரண விசாரணையின் போது உட்காயங்கள் காரணமாக ஏற்பட்ட குருதிப்பெருக்கே அவரது மரணத்துக்கு காரணம் என்பது தெரியவந்தது. ஒக்ரோபர் மாதமளவில் பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தின் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட ஏழு பேர் கைதுசெய்யப்பட்டனர் எனவும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் கூறியுள்ளது. (அ)

## இலங்கை...

மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது. இதன்போது, உரையாற்றிய ஈரான் ஜனாதிபதி மேலும் தெரிவித்தவை வருமாறு,

இலங்கையுடன் சிறந்த பங்காளித்துவத்துடன் முன்னோக்கி செல்ல ஈரான் தயாராக இருப்பதாக நான் உறுதியளிக்கிறேன். இலங்கையின் மிகப்பெரும் அபிவிருத்தி திட்டங்களுக்கு தொழில்நுட்ப மற்றும் பொறியியல் சேவைகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்கும் பங்களிக்க ஈரான் தயாராக உள்ளது - என்றார். (ஐ)

## 250ரூபா...

250 முதல் 300 ரூபாயாலும் 450 கிராம் பால்மா பைக்கெற்றின் விலை 100 முதல் 130 ரூபாயாலும் குறைக்கப்படுவதாக பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. (ஐ)

## யாழ்ப்பாணம்...

உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பிலான சுருக்கமுறையற்ற வழக்கு விசாரணைகள் யாழ். நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு வழக்கு பாரப்படுத்தப்பட்டது. இதையடுத்து, சட்டமா அதிபர் திணைக்களத்தினால் யாழ். மேல் நீதிமன்றில் குற்றப்பகிர்வு பாத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இதன் அடிப்படையில் , யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி டெனிஸ் சாந்தன் சூசைதாசன் முன்னிலையில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் நேற்று மன்றில் தோன்றி சாட்சியமளித்தார்.

அத்துடன், இந்த வழக்கில் படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தரும் தனது சாட்சியத்தை பதிவு செய்தார்.

குறித்த வழக்கு தொடர்பான விசாரணைகள் தொடர் விசாரணைகளாக மூன்று நாட்கள் முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (ஐ)

## தேர்தல்...

பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, ஹரின் பெர்னாண்டோ, டிரான் அலஸ், பிரசன்ன ரணதுங்க மற்றும் காஞ்சன விஜேசேகர ஆகியோர் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டனர் என தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் தேர்தல் தொடர்பில் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியிடம் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது கருத்துரைத்த பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், மே தினத்தை அடுத்து தேர்தல் பிரசார நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என கூறினார்.

அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைக்கும் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென வும் அவர் சுட்டிக்காட்டினார் எனத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாராயின் அது தொடர்பில் சகல கட்சிகளிடமும் எழுத்து மூல ஆதரவை கோருவது சிறந்த விடயமாக அமையும் என முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இதன் போது கூறினார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் அரசாங்கத்தின் பல செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியிருப்பதனால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான தமது தீர்மானத்தை எதிர்வரும் ஜூன் மாத இறுதியில் அறிவிக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது கூறியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## தமிழ் அரசு...

சட்டத்தரணி கே. வி. தவராசா சுமந்திரன் தவிர்ந்த ஏனைய மனுதாரர்கள் கோரும் நிவாரணங்களை தர சம்மதம் தெரிவித்துள்ளனர். எனவே, வழக்கை முடித்துவைக்க வேண்டும்", என்று கோரினார்.

இதன்போது, வழக்காளி தரப்பு சட்டத்தரணி - கடந்த தவணைகளில் இருந்த நிலைமை தற்போது இல்லை. 6ஆவது பிரதிவாதி (சுமந்திரன்)எடுத்த நிலைப்பாட்டை போல, 3 (குலநாயகம்), 5 (ப. சத்தியலிங்கம்)ஆம் பிரதிவாதிகளும் நிலைப்பாடு எடுத்து ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளனர் - என்று கூறினார்.

சட்டத்தரணி சுமங்கலா இருவர் சார்பிலும் ஆட்சேபனை தாக்கல் செய்திருந்தமை இதன்போது தெரியப் படுத்தப்பட்டது.

இதற்கு கே. வி. தவராசா கடுமையான ஆட்சேபனை தெரிவித்தார்.

வழக்கின் ஆரம்பத்தில் தமக்கு ஆட்சேபனை இல்லையென நீதிமன்றத்தில் கையெழுத்திட்டு விட்டு, இப்போது நிலைப்பாட்டை மாற்ற முடியாதென சுட்டிக்காட்டினார்.

வழக்கு விசாரணைக்கு திகதி குறிப்பதை எதிர்த்த சட்டத்தரணி கே. வி. தவராசா, வழக்காளி என்ன எதிர்பார்க்கிறார், வழக்கை முடிவுக்கு கொண்டு வரவும், வழக்கை மீளப்பெறவும் அவரின் நிலைப்பாடு என்ன என அறிய திகதி நிர்ணயிக்க வேண்டுமென கேட்டார்.

இதை ஏற்ற நீதிபதி, வழக்கை மே 31ஆம் திகதிக்கு ஒத்திவைத்து. அன்றைய தினம் வழக்காளி தனது நிலைப்பாட்டை அறிவிக்க உத்தரவிட்டார்.

இதேவேளை, இந்த வழக்கில் தமிழ் அரசு கட்சியின் கனடா கிளை உறுப்பினரான மு. அகிலன்மீது கடந்த வழக்கு விசாரணையில், எம். ஏ. சுமந்திரன் நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு சுமத்தியிருந்தார். அவரை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டது.

எனினும், நேற்று மு. அகிலன் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. அவர் சார்பில் சட்டத்தரணிகள் கனகசபை ரவீந்திரன், துசித் ஜோன்தாசன் ஆகியோரால் இடைபுகு மனு தாக்கல் செய்யப்பட்டது. இதற்கு எம். ஏ. சுமந்திரன் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

நீதிமன்றத்தில் முன்னிலையாகாத அகிலனுக்கு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.

இந்த வழக்கில் 2, 4ஆம் எதிராளிகள் சார்பில் சட்டத்தரணிகள் பிருந்தா சந்திரகேஸ், சிவானந்தராஜா, ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசா ஆகியோரும், 1, 7ஆம் எதிராளிகள் சார்பில் சட்டத்தரணி ம. யூட் தினேஷ், ஜனாதிபதி சட்டத்தரணி வி. புவிதரன் ஆகியோரும், 3, 5ஆம் எதிராளிகள் சார்பில் சட்டத்தரணி குலநாயகம் சுமங்கலா, 6ஆம் எதிராளி எம். ஏ. சுமந்திரன் சார்பில் அவரே முன்னிலையாகினர்.

வழக்காளி சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஜிப்ரி அழகரட்ணம் முன்னிலையாகியிருந்தார்.

இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு கடந்த ஜனவரி 21ஆம் திகதி தலைவர் தேர்தல் நடந்தது. இதில், சி. சிறீதரன் வெற்றி பெற்றார். இதைத் தொடர்ந்து, ஜனவரி 27ஆம் திகதி பொதுச் செயலாளர் மற்றும் நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது. இந்த நிர்வாக தெரிவுகளுக்கு எதிராக திருகோணமலையை சேர்ந்த கட்சியின் கீழ் நிலை உறுப்பினர் ஒருவர் வழக்கு தொடர்ந்தார். இதைத் தொடர்ந்து, புதிய நிர்வாகம் பொறுப் பேற்க இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சஹ்ரானின்...

வேளை விவாதம் நேற்று பாராளுமன்றில் நடந்தது. இதில், பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “சஹ்ரான் உள்ளிட்ட குழுவினர் இவ்வாறான செயலில் ஈடுபடுவதற்கு காரணம் கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டு வரும் சூழ்ச்சி என்றும் இதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் தற்போது பொறுப்புவாய்ந்த மதத் தலைவர்கள் கூறுகின்றனர்.

கோட்டாபய ராஜபக்ஷவின் அரசியல் தவறுகள் வேறு கதையாகும். ஆனால், இதனை கோட்டாபய ராஜபக்ஷவின் சூழ்ச்சி என்று கூறுவதற்கு இந்த பாராளுமன்றத்தில் முயற்சிக்கப்படுமாக இருந்தால், இந்தப் பிரச்னைகளை மூடி மறைப்பதற்கான சூழ்ச்சியாகவே பார்க்க வேண்டும். கோட்டாபய இதனைத் தெரிந்துகொண்டிருந்தார் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல.

எவ்வாறாயினும் சஹ்ரானின் கொள்கைகளைக் கொண்ட ஐயாயிரம் பேராவது இலங்கையில் இருக்கலாம். இங்கிருந்து ஐ.எஸ். அமைப்புடன் சென்று போராடுபவர்கள் இல்லையெனக் கூற முடியுமா? இதனை கோட்டாபய ராஜபக்ஷவின் சூழ்ச்சியென கூறிக்கொண்டு இருக்காது இந்த சம்பவத்தின் பின்னால் இருக்கும் விடயங்கள் என்ன என்று ஆராய வேண்டும்- என்றார். (எ)

## படகு...

பீரிஸ் என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஈரான்...

பேரில் இந்த நிகழ்வுக்கு வருகை தந்திருந்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

இருநாட்டு தலைவர்களும் பெயர் பலகையை திரைநீக்கம் செய்து “உமா தியா ஜனனி” பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை மக்களிடம் கையளித்தது டன், டிஜிற்றல் தொழில்நுட்ப முறையின் ஊடாக மின் உற்பத்தி இயந்திரங்களை இயக்கி பணிகளை ஆரம்பித்து வைத்தனர்.

இதனையடுத்து இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க,

ஈரானின் ஆதரவின்றி இலங்கையால் உமா ஓயாவிலிருந்து கிரிந்தி ஓயாவுக்கு தண்ணீரை கொண்டு சென்றிருக்க முடியாது. அதற்காக ஈரான் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிப்பதாகவும் ஈரானுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக்கொண்டு முன்னோக்கிச் செல்வதே நோக்கமாகும் - என்று கூறினார். (எ)

## சிறுமி...

தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பாலியல் வன்கொடுமை படுகொலை போன்ற குற்றங்களை செய்த நபரை பொலிஸார் வவுனியா எப்படி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்? இதில்தான் மர்மம் உள்ளது. இந்நபர் அந்த கிராமத்திலுள்ள தென்னந் தோட்டத்தில் வேலை செய்துள்ளார். தொழிலை பெறவரும்போது தனது பெயர் விஜேந்திரன் என்றும் அந்த தென்னந் தோட்ட உரிமையாளரிடம் தெரிவித்து அந்தக் கிராமத்தில் வாழ்ந்துள்ளார்.

அவர் கைது செய்யப்பட்ட பின்னர் தான் தெரியும் அவரின் பெயர் அப்துல் ரகுமான் என்பது. சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து படுகொலை செய்த ஒரு நபரை பொலிஸார் எவ்வளவு அலட்சியமாக தப்ப விட்டுள்ளனர். வவுனியா சிறையிலிருந்து மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு தப்பிக்க விட்டுள்ளனர். இது தொடர்பில் நீதி அமைச்சரின் பதில் என்ன? - என்றார். (எ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

# பன்முகப்படுத்தப்பட்ட பட்ஜெட் நிதி தமிழ் எம். பிக்களுக்கும் 5 கோடி!

யாழ்ப்பாணம், ஏப். 25

**அரசதரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர, வடக்கு - கிழக்கிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் இவ்வருடம் ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

2021 - 2023 வரையான மூன்று வருட காலம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வருடாந்த ஒதுக்கீடுகள் வழங்கப்படாத நிலையிலேயே, இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இராஜபுத்திரன் சாணக்கியன், கோவிந்தன் கருணாகரன், வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், சாள்ஸ் நிர்மலநாதன்,

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், சிவஞானம் சிறீதரன், ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களுக்காக ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் தலா ஐந்து கோடி ரூபாய் நிதி, ஜனாதிபதி செயலகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம், இராஜவரோதயம் சம்பந்தன், எம். ஏ. சுமந்திரன், சி. வி. விக்னேஸ்வரன், செல்வராஜா கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தவராசா கலையரசன் ஆகியோர், காலம் தாழ்த்தி தமது முன்மொழிவுகளை அனுப்பி வைத்ததால், அவர்களுக்கான ஒதுக்கீடுகளை அனுமதிப்பதிலும் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ)

# தூதரக சேவையில் மாற்றம்

கொழும்பு, ஏப். 25

வெளிவிவகார அமைச்சின் தூதரக அலுவல்கள் பிரிவு எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி முதல் பத்தரமுல்லை - சுஹூருபாய நிர்வாக கட்டடத்துக்கு மாற்றப்படவுள்ளது.

குறித்த தினத்திலிருந்து, புதிய அலுவலகத்தில் வழமையான அலுவலக நேரங்களில் சகல தூதரக சேவைகளும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அதேநேரம், கொழும்பிலுள்ள தூதரக அலுவல்கள் பிரிவினால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஆவண அத்தாட்சிப்படுத்தல் சேவைகள், எதிர்வரும் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் தற்காலிகமாக இடைநிறுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தக் காலப்பகுதியினுள் பிராந்திய அலுவலகங்களில் சேவைகளை பெறமுடியுமென வெளி விவகார அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

# “அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து தோட்ட நிர்வாகத்தை புறக்கணிக்க வேண்டும்”

கொழும்பு, ஏப். 25

பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான பேச்சுக்களை மீண்டும் புறக்கணித்துள்ளது. அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து தோட்ட நிர்வாகத்தைப் புறக்கணிக்க வேண்டும். இலங்கைத் தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தினுடைய அடுத்த கட்ட நடவடிக்கை கலந்துரையாடலின் பின்னர் அறிவிக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் ஆராய சம்பள நிர்ணய சபை நேற்றுப் புதன்கிழமை கூடியது. இதில் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் அங்கத்தவர்களும்



கலந்து கொண்டனர். ஆனால், இன்று பெருந்தோட்ட நிறுவனங்கள் சம்பள நிர்ணய சபையின் கூட்டத்தைப் புறக்கணித்தன. மீண்டும் ஒருமுறை தோட்டத் தொழிலாளர்களையும் சம்பள நிர்ணய சபையையும் தோட்ட நிறுவனங்கள் புறக்கணித்தன.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே வடிவேல் சுரேஷ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இரண்டு முறை கூடிய சம்பள நிர்ணய சபைக்கு முதலாளிமார் சம்மேளனம் வருகை தரவில்லை. மூன்றாம் முறையும் வருகை தரா விடின் நாட்டினுடைய தொழில் சட்டத்துக்கு அமைய சம்பள நிர்ணய சபையில் ஆகக் கூடுதலான வாக்கு வித்தியாசத்தில் எந்தத் தொகை நிர்ணயிக்கப்படுகின்றதோ அதனை பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனமாக உறுதி செய்து வர்த்தமானியில் வெளியிட தொழில் அமைச்சருக்கும் தொழில் ஆணையாளருக்கும் அதிகாரம் உள்ளது.

பெருந்தோட்ட நிர்வாகங்களிடம் நாம் கையேந்தவில்லை. உழைப்புக்கேற்ற ஊதியமே கேட்கின்றோம். எங்களுடைய பொறுமையை சோதிப்பதனால் பெருந்தோட்ட நிறுவனங்கள் பல பிரச்னைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். - என்றார். (எ)

# பெண்களிடம் கொள்ளையிடும் கும்பல்களினால் மக்கள் அச்சம்!

கொழும்பு, ஏப். 25

பாணந்துறை, கல்கிஸை மற்றும் நுகேகொடை பகுதிகளில் வீதியில் செல்லும் பெண்களிடம் கொள்ளையிடும் நபர்களால் பிரதேச மக்கள் அச்சமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நபர்கள் கடந்த ஒரு மாதத்திற்குள் சுமார் 40 கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மொரகஹஹேன, கெஸ்பேவ, பிலியந்தலை, பொரலஸ்கமுவ, கஹதுடுவ, கடுவெல, தெபுவன போன்ற பிரதேசங்களில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மூவரிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் கொலை!

கொழும்பு, ஏப். 25

மூவரிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் குத்திக் கொல்லப்பட்டார்.

மின்னேரியா மின்சார சபைக்கு அருகே நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மோதலிலேயே இவர் கொல்லப்பட்டார்.

இதில், மின்னேரிய ஹென்யாய பிரதேசத்தைச் சேர்ந்த எச்.கபில பொன்சேகா என்பவரே உயிரிழந்தவராவார். (ஐ)

# விகாரை அரச மரக்கிளை வீதியில் விழுந்து விபத்து!



கொழும்பு, ஏப். 25

கொழும்பு, சங்கராஜ மாவத்தைக்கு அருகிலுள்ள விகாரை ஒன்றின் அரச மரக்கிளை முறிந்து விழுந்ததில் விபத்து ஏற்பட்டது.

சிறீ சங்கராஜ விகாரையின் அரச மரக்கிளையே நேற்று மாலை இவ்வாறு முறிந்து விழுந்தது.

மரக்கிளை முறிந்து வீழ்ந்ததில் லொறி ஒன்றும், முச்சக்கரவண்டி ஒன்றும் சேதமடைந்தன.

விபத்தில் காயமடைந்த ஒருவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தால் அந்த இடத்தைச் சுற்றி கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது. (எ)

# அயோத்தி கோவிந்த் தேவ் சுவாமி சீதையம்மன் ஆலயத்தில் வழிபாடு





நுவரெலியா, ஏப். 25

இந்தியாவின் அயோத்தி நகரிலிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ள சுவாமி கோவிந்த் தேவ் கிரி மகாராஜ் நேற்றைய தினம் நுவரெலியா சிறீ சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார்.

காலை 10 மணியளவில் சீதையம்மன் ஆலயத்துக்கு வருகைதந்த சுவாமி கோவிந்த் தேவ் மகாராஜை ஆலயத்தின் அறங்காவலர் சபைத் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் மலர்மாலை அணிவித்து வரவேற்றார்.

அதனைத் தொடர்ந்து நுவரெலியா பரிசுத்த திருத்துவ மத்திய கல்லூரி மாணவர்களின் கலாசார இசை, நடன நிகழ்வுகளோடு மங்கள வாத்தியம் முழங்க ஆலய பரிபாலன சபையினரால் கோவிந்த் தேவ் ஊர்வலமாக ஆலயத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

இதன்போது நுவரெலியா பிளக்பூல் சென் அன்தனிஸ் மாணவர்கள் மலர் தூவ, காயத்திரி பீடம் பாவரசா நர்த்தனாலயா மாணவர்களின் வரவேற்பு நடனத்தோடும் வரவேற்கப்பட்டார்.

தொடர்ந்து சுவாமி கோவிந்த் வருகையை நினைவுகூரும் முகமாக நினைவுக் கல்வெட்டு ஒன்றை திரைநீக்கம் செய்துவைத்ததுடன் விசேட பூஜைகளை தலைமையேற்று நடத்தினார்.

அதன் பின்னர், சுவாமி கோவிந்த் தேவ் கிரி மகாராஜ் அனைத்து பக்தர்களையும் ஆசீர்வதித்தார். தொடர்ந்து, சுவாமிக்கு ஆலய நிர்வாக சபையினரால் நினைவுப் பரிசு வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். (எ)

# 12 வெளிநாட்டுத் துப்பாக்கிகளுடன் ஓட்டோவில் பயணித்த 2பேர் கைது!

கொழும்பு, ஏப். 25

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 12 போர் துப்பாக்கிகளுடன் முச்சக்கரவண்டியில் பயணித்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் .

கம்பளை இராணுவத்தினரால் கலஹா பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் .

கைது செய்யப்பட்டவர்கள் 51 மற்றும் 24 வயதுடைய வர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கலஹா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஸ்ரொய்னிஸ் அபார ஆட்டம் சென்னை மீண்டும் தோல்வி

சென்னை, ஏப். 25

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 39 ஆவது லீக் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் மோதின. இதில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் லக்னோ அணி வெற்றி பெற்றது. மார்க்கஸ் ரொயினிஸ் அபாரமாகத் துடுப்பெடுத்தாடி அணியின் வெற் றிக்கு உதவினார்.



இந்தப் போட்டி சென்னை - சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. இதில் நாண யச்சுழற்சியில் வென்ற லக்னோ பந்து வீச்சை தெரிவு செய்தது.

முதலில் துடுப் பெடுத்தாடிய சென்னை அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 210 ஓட்டங்கள் எடுத்தது. அணித் தலைவர் ருதுராஜ் 60 பந்துகளில் 108 ஓட்டங்கள் எடுத்தார். ஷிவம் துபே 27 பந்துகளில் 66 ஓட்டங்கள் விளாசினார்.

211 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை லக்னோ அணி விரட்டியது. அந்த அணியின் தலைவர் கே. எல். ராகுல் மற்றும் டி கொக் இணைந்து இன்னிங்ஸை ஆரம்பித்தனர். முதல் ஓவரில் டி கொக்கை வெளியேற்றினார் தீபக் சாஹர். 5 ஆவது ஓவரில் கே. எல். ராகுலை வீழ்த்தினார் முஸ்தபிசுர் ரஹ்மான்.

இதன் பின்னர் மார்க்கஸ் ரொயினிஸ் மற்றும் தேவ்தத் படிக்கல் இணைந்து 55 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். படிக்கல் 13 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நிக்கோலஸ் பூரனுடன் இணைந்து 70 ஓட்டங்கள் எடுத்தார் ரொயினிஸ். பூரன் 15 பந்துகளில் 34 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார்.

பின்னர் தீபக் ஹூடாவுடன் இணைந்து 55 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தார் ரொயினிஸ். 56 பந்துகளில் ரொயினிஸ் சதம் விளாசினார். அவரது அபார இன்னிங்ஸின் பலனாக 19.3 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 213 ஓட்டங்கள் எடுத்தது லக்னோ. இதன் மூலம் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ரொயினிஸ் 124 ஓட்டங்கள் மற்றும் ஹூடா 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

புள்ளிகள் பட்டியலில் 4 ஆவது இடத்துக்கு அந்த அணி முன்னேறியது. சென்னை அணி 5 ஆவது இடத்தில் உள்ளது.

(எ)



## இந்திய வீராங்கனை சிறீ ஜா முதலிடம்

டில்லி, ஏப். 25

சர்வதேச ரேபிள் ரென்னிஸ் வீரர், வீராங்கனைகளின் தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் கொமன்வெல்த் விளையாட்டில் கலப்பு இரட்டையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்ற இந்திய வீராங்கனை சிறீ ஜா அகுலா முதலாம் இடத்துக்கு முன்னேறி 38 ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

இதன்மூலம் சிறீ ஜா அகுலா, இந்தியாவின் முதலாவது வீராங்கனை என்ற அந்தஸ்தை பெற்றுள்ளார். இதேவேளை, இந்தியாவின் முதன்நிலை வீராங்கனையாக திகழ்ந்த மணிகா பத்ரா 2 இடங்களை இழந்து 39 ஆவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளார்.(எ)

## ஐ. பி. எல்லில் 200 விக்கெட் வீழ்த்திய முதல் வீரர் சஹல்



ஜெய்பூர், ஏப். 25

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் 200 விக்கெட்களை வீழ்த்திய முதல் வீரர் என்ற சாதனையை ராஜஸ்தான் றோயல்ஸ் சுழல்பந்து வீச்சாளர் யுஸ்வேந்தர் சஹல் படைத்துள்ளார்.

மும்பை இந்தியன்ஸ் அணிக்கெதிராக ஜெய்பூர், சவாய் மான்சிங் மைதானத்தில் நடந்த போட்டியிலேயே அவர் இந்த சாதனையை எட்டினார்.

தனது பந்துவீச்சில் முகமட் நபியின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் ஐ. பி. எல்லில் 200 விக்கெட்களை சஹல் பூர்த்தி செய்தார். (எ)



## இந்தியா பெருமிதம் கொள்கிறது

### குகேஷூக்கு மோடி வாழ்த்து

டில்லி, ஏப். 25

கேண்டிடேட்ஸ் செஸ் தொடரில் வெற்றி பெற்ற இந்திய செஸ் வீரர் டி. குகேஷூக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடியின் எக்ஸ் தள பதிவில் : “கேண்டிடேட்ஸ் செஸ் தொடரில் மிக இளம் வயதில் வெற்றி பெற்றவர் என்ற சாதனையை படைத்த டி. குகேஷ் பற்றி இந்தியா பெருமிதம் கொள்கிறது.

குகேஷின் சாதனை அவரின் அசாதாரண திறமை மற்றும் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது. அவரது சிறந்த செயல்திறன், வெற்றியை நோக்கிய பயணம் மில்லியன் கணக்கானவர்களை ஊக்குவிக்கிறது” என்று பதிவிட்டுள்ளார்.(எ)




## இலங்கை அணித் தலைவி சமரி அத்தபத்து முதலிடம்

கொழும்பு, ஏப். 25

சர்வதேச ஒருநாள் துடுப்பாட்ட வீராங்கனைகளில் இலங்கை அணித் தலைவி சமரி அத்தபத்து மீண்டும் முதலாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

மகளிர் ஒருநாள் துடுப்பாட்ட தரவரிசையில் சமரி அத்தபத்து முதலாம் இடத்தைப் பெற்றது இது இரண்டாவது தடவையாகும்.

2023 ஜூலை 3 ஆம் திகதியிலிருந்து 12 ஆம் திகதி வரை சிறிது காலத்துக்கு அத்தபத்து முதலிடத்தில் இருந்தார். இதன் பின்னர் பெத் மூனியும் அவரைத் தொடர்ந்து நட்டாலி சிவர் பரன்ட்டும் முதலிடத்தை பிடித்தனர்.

தென் ஆபிரிக்காவுக்கு எதிரான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கு முன்னர் தரவரிசையில் இரண்டாம் இடத்திலிருந்த சமரி அத்தபத்து, தொடர் முடிவில் 773 புள்ளிகளுடன் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

தென் ஆபிரிக்காவுக்கு எதிராக நடைபெற்ற மூன்றாவது மகளிர் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஆட்டமிழக்காமல் 195 ஓட்டங்களைக் குவித்ததன் மூலம் சமரி அத்தப்பத்து தரிவரிசையில் முன்னேறினார்.

அவரது அபார சதத்தின் உதவியுடன் தென் ஆபிரிக்காவுக்கு எதிரான ஐ. சி. சி. மகளிர் சம்பியன்ஷிப் தொடரை 1 - 1 என்ற கணக்கில் இலங்கை சமப்படுத்தியது குறிப்பிடத்தக்கது. (எ)

## “உலகக் கிண்ணத் தொடரில் நிச்சயம் களம்காண்பார் ரிஷப்”

டில்லி, ஏப். 25

“எதிர்வரும் ரி - 20 உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் ரிஷப் பண்ட் நிச்சயம் இடம்பெறுவார்” - இவ்வாறு டில்லி அணியின் தலைமை பயிற்சியாளர் ரிக்கி பொன்டிங் தெரிவித்தார்.

இந்திய அணியில் ரிஷப் பண்ட் நிச்சயம் இடம் பெறுவார். அவர் சிறந்த வீரர். அணியில் அவரை தெரிவு செய்வது அவசியம். ஆட்டத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர். அவர் களத்துக்குத் திரும்பியதால் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் உள்ளோம். விக்கெட்டுகளுக்கு இடையில் சிறப்பாக ஓடுகிறார். சிறந்த முறையில் விக்கெட் காப்பாளர் பணியைக் கவனிக்கிறார்.

விபத்துக்குப் பிறகு நான் அவரைப் பார்த்தபோது கவலையாக இருந்தது. ஆனால், அவர் தற்போது மீண்டு வந்துள்ளார். சிறப்பாக விளையாடுகிறார். அது அவரது முகத்தில் புன்னகை பூக்கச் செய்துள்ளது. அது இந்த நேரத்தில் முக்கியமானது- என்றார் ரிக்கி பொன்டிங்.

அமெரிக்கா மற்றும் மேற்கு இந்திய தீவுகளில் நடப்பு ஆண்டுக்கான ரி - 20 உலகக் கிண்ணத் தொடர் நடைபெறுகிறது.

ஜூன் முதலாம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை இந்தத் தொடர் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தியா உட்பட 20 அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடரில் மொத்தம் 55 போட்டிகள் நடைபெறவுள்ளன (எ)



# ANZAC 'அன்சாக்' தினம் ஏப்ரல் - 25

# அன்சாக் தின கலப்போலி தரையிறக்க தோல்வி!

# குழந்தைப் போர்வீரர் அலக் காம்ப்பெலின் தியாகம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

போரின் கொடுமை எவ்வாறு இருக்கும் என்பதை அன்றைய அவுஸ்திரேலிய பொது மக்கள் உணர்ந்து உள்ளார்கள் என்பதன் சாட்சிய வெளிப்பாடே 'அன்சாக்' (ANZAC) தினம் எனலாம்.

துருக்கியின் கலப்போலியில் (Gallipoli) தோல்வி அடைந்த தரையிறக்கத்தின் எட்டு மாதப் போரின் தொடக்க நாளான 1915 ஏப்ரல் 25ம் நாள் அவுஸ்திரேலிய தினத்தைப் போன்றே அவுஸ்திரேலியர்களுக்கு முக்கியமான மற்றொரு தினமாகும்.

தற்போது 'அன்சாக்' தினமாக அனுஷ்டிக்கப்படும் ஏப்ரல் 25இல் தொடங்கிய கலப்போலி தரையிறக்க போரில் 26,000 அவுஸ்திரேலிய வீரர்கள் உயிரிழந்தனர். இதில் 8,000 பேர் காயங்கள் அல்லது நோயால் இறந்தனர்.

**தோல்வியடைந்த கலப்போலி தரையிறக்கம்:**

கலப்போலியைக் கைப்பற்றும் முயற்சி தோல்வியைத் தழுவினாலும், இப்போர்க்காலம் அவுஸ்திரேலிய நியூசிலாந்து வீர்ர்களின் வீரத்தையும் தியாகத்தையும், இந்நாட்டு மக்களின் ஒருமைப்பாட்டையும் வெளிக்கொணர்ந்த காலமாக அறியப்படுகிறது. அதேவேளை கலப்போலி தீபகற்பத்தில் போரிட்ட மக்களின் வீரமும் தியாகமும் காவியமாக உருவெடுத்தது என்றும் கூறலாம்.

'அன்சாக்' என்ற சொல் அவுஸ்திரேலிய வாழ்வியலின் ஒரு பகுதியாக மாறிவிட்டது. முதலாம் உலகப்போரில் பங்கேற்ற மற்றும் உயிர்நீத்தப் படைவீரர்களின் நினைவாக, போர்வீரர் நினைவுதினத்தை இரு நாடுகளிலும் ஆண்டுதோறும் ஏப்ரல் 25 ஆம் நாள் 'அன்சாக்' தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

கலப்போலி தரையிறக்கங்கள் முதன்முதலில் 1916 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து மற்றும் எகிப்து துருப்புக்களால் நினைவுகூரப்பட்டன. அந்த ஆண்டில்தான் ஏப்ரல் 25ஆம் தேதிக்கு "அன்சாக் தினம்' என்று பெயரிடப்பட்டது. அப்போதிருந்து, ஏப்ரல் 25 அன்சாக் தினமாக அனுசரிக்கப்பட்டு



வருகிறது.

போர் முடிவின் பின்னர் இந்நாள் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய இரு நாடுகளிலும் பெருமளவில் தேசிய ஒருமைப்பாட்டு அலையை உருவாக்கியது. அத்துடன் கலப்போலி போர் நினைவிடங்கள் பலவும் அமைக்கப்பட்டன. வீரர்களுக்கான நினைவேந்தல்கள் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டன.

**முதல் உலகப்போரில் அவுஸ்திரேலியா:**

முதல் உலகப்போரின்போது, நேச நாட்டு படைகளுக்கு ஆதரவாக, மத்தியத்தரைக்கடல் பயணப்படையின் ஒரு அங்கமாக அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போர்வீரர் படைக்குழாம் உருவாக்கப்பட்டது.


'அன்சாக்' படைக்குழாம் உருவாக்கப்பட்டதன் நோக்கம், கூட்டுப்படைகளின் போர்க்கப்பல்கள் கருங்கடல் வழியே துருக்கியின் தலைநகரான இஸ்தான்புல்லை கைப்பற்ற ஏதுவாக கலப்போலி தீபகற்பத்தைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதாகும்.

அவுஸ்திரேலிய நாட்டின் அமைதிக்காகவும், சமாதானத்திற்காகவும் ஏராளமான அவுஸ்திரேலிய இளைஞர்கள் அன்று தங்களைப் போராட்டத்தில் இணைத்துக் கொள்வதில் முண்டியடித்து ஆர்வம் காட்டினார்கள் என வரலாற்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமது நாட்டு மக்களுக்காகப் போராடுவதற்காக அந்த இளைஞர்கள் காட்டிய கடமை உணர்ச்சியை விளக்குவதற்கு ஒரு வரலாற்றுச் சம்பவமே குழந்தைப் போர்வீரனான அலக் காம்ப்பெலின் வாழ்வாகும்.

**குழந்தைப் போர்வீரனான அலக் காம்ப்பெல்:**

அக்காலகட்டத்தில் அவுஸ்திரேலிய நாட்டிலிருந்து சுமார் 324,000 இளைஞர்கள் தம்மை இந்த போராட்டத்




**அவுஸ்திரேலியா - நியூஸிலாந்து நாட்டு மக்களின் போர் நினைவு நாளே அன்சாக் ஏப்ரல் 25ம் நாளாகும். இந்நாளில் கலப்போலி தரையிறக்க தோல்வி பற்றியும், குழந்தைப் போர்வீரர் அலக் காம்ப்பெலின் தியாகத்தையும் உலகம் மறந்து விட்டது.**

தோடு இணைத்துக் கொண்டார்கள். அவர்களில் 66,000க்கு மேற்பட்ட இளைஞர்கள் போரில் மடிந்து மாவீரர்களானார்கள் என்பதை யாரும் மறக்க முடியாது.

1915ம் ஆண்டில் அலக் காம்ப்பெல் என்கின்ற அவுஸ்திரேலியச் சிறுவனுக்கு அப்போது பதினாறு வயதுதான் ஆகியிருந்தது. இராணுவத்தில் சேர்வதென்றால் இருபத்தியொரு வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். அதற்கும் இளையவராக இருந்தால் பதினெட்டு வயதிற்கும் இருபத்தியொரு வயதிற்கு உட்பட்டவர்கள் தமது பெற்றோரின் சம்மதத்துடன்தான் இராணுவத்தில் சேர்ந்து கொள்ளலாம் என்ற சட்டம் அப்போது அவுஸ்திரேலியாவில் இருந்தது. ஆனால் அலக் காம்ப்பெலுக்கோ 16 வயதுதான் ஆகியிருந்தது.

தன்னுடைய வயது 18 ஆண்டுகள் 4 மாதங்கள் என்ற பச்சைப்பொய் ஒன்றைச் சொன்னார். தான் போர்ச் சண்டையில் இணைவதற்கும் பெற்றோர்கள் சம்மதித்து அளித்த கடிதத்தையும் இராணுவ அதிகாரிகளிடம் அவர் கையளித்து தன் தேசத்து மக்களுக்காக,ஒரு போர் வீரனாகத் தன்னை படையில் இணைத்துக் கொண்டார்.

**குழந்தைப் போர்வீரரின் தியாகம்:**

குழந்தைப் போர்வீரன் என்று அழைக்கப்பட்ட திரு அலக் காம்ப்பெல் 2002ம் ஆண்டு மே மாதம் 16ம் திகதி இறந்தபோது அவருக்கு வயது 103. அச்செய்தியால் அவுஸ்திரேலியக் கண்டம் முழுவதும் அவுஸ்திரேலியத் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறந்தது. சகல தொலைக்காட்சிகளும், செய்திப் பத்திரிகைகளும் தங்களுடைய மரியாதையை அந்தக் குழந்தைப் போர்வீரனுக்கு அர்ப்பணித்தன. பூரண அரசாங்க மரியாதைகயோடு அவருடைய இறுதி ஊர்வலத்தை நடாத்தியதன் மூலம் இத்தேசம் தனது நன்றிக் கடனைச் செலுத்தியது.

இன்றைய காலத்தில் 'அன்சாக்' தினம் கொண்டாடப்படுகின்ற வேளையில் அமரர் அலக் காம்பெலின் நாட்டுப்பற்றை அவுஸ்திரேலிய தேசம் மதித்துத் தலை வணங்குகின்றது. அந்தக் குழந்தைப் போர் வீரனைத் தனது தேசியச் சொத்தாக அவுஸ்திரேலிய தேசம் போற்றியதும் உண்மையே.

அந்தக் குழந்தைப் போர்வீரனின் அர்ப்பணிப்பை ஒரு தேசியத்தின் கடமையாக, நாட்டுப்பற்றாக, தியாகமாக, அவுஸ்திரேலிய நாடும் மக்களும் மதித்துப் போற்றுவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.



Alec William Campbell (1899 - 2002)

துருக்கி கலப்போலியில் கால் வைத்த 1915 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் நாளான முதல் நாளே இரு தரப்பிலும் பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்ட துயரத்தை எடுத்தியம்பும் ஏப்பிரல் மாதத்து 25ம் திகதியானது அவுஸ்திரேலியா - நியூஸிலாந்து நாட்டு மக்களுக்கு மிகவும் முக்கியமான தினமாகும்.

1914-1918 ஆண்டுக் காலப்பகுதிகளில் நடைபெற்ற போரில் கலந்து கொண்ட இந்நாடுகளின் போர்வீரர்களின் நினைவாக இந்த இரண்டு நாடுகளின் பெயர்களில் உள்ள முதல் எழுத்துக்களையும் இராணுவ அணியினைக் குறிக்கும் முதல் எழுத்துக்களையும் சேர்த்து 'அன்சாக் தினம்' என்று அவுஸ்திரேலிய-நியூஸிலாந்து மக்கள் தங்கள் தேசத்துப் போர் வீரர்களைக் கௌரவிக்கும் ஏப்ரல் 25 நாள் துயரத்தையும் தியாகத்தையும் வெளிப்படுத்துகிறது.



# சர்வதேச விளையாட்டு ஒன்றில் இலங்கை பெற்ற முதல் தங்கப் பதக்கம் எதிர்வீரசிங்கம் பெற்றுக்கொடுத்தது!

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் லொஸ் ஏஞ்சல்ஸ் மாநகரில் உள்ள தமது வீட்டில் வியாழக் கிழமை 18 ஏப்ரல் 2024 அன்று பகல் 11:55 மணிக்கு கலாநிதி நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் அவர்கள் காலமானார். அவரது அமைதியான மறைவின் போது அவரது குடும்பத்தினர் அவரின் அருகில் இருந்தனர். அப்போது அவருக்கு வயது 89.

நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் (எதிர்) 1934ஆம் ஆண்டில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள பெரியவிளான் என்ற ஒரு சிறிய கிராமத்தில் களிமண் தரையும் பனை ஓலைக் கூரையும் கொண்ட ஓர் அறைக் குடிசையில் பிறந்தார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடந்த போட்டி ஒன்றில் அவருக்குப் பரிசாகக் கிடைத்த தடகள மெய்வல்லுனர் புத்தகமொன்றில் இருந்த படங்களைக் கவனமாக ஆராய்ந்து உயரம் பாய்வது எப்படி என்று தமது சிறிய பின்வளவில் எதிர் தானாகவே கற்றுக் கொண்டார். யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு திரையரங்கில் 1948 ஒலிம்பிக் போட்டிகள் குறித்த செய்திப்படம் ஒன்றைப் பார்த்த பின்னர் இப்படியான ஓர் ஒலிம்பிக் போட்டிக்குத் தானும் போவேன் என்று ஓர் உறுதியை எதிர் தனக்குள் எடுத்துக்கொண்டார். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, 17 வயதான எதிர் ஹெல்சிங்கி - பின்லாந்து 1952 ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்றார். மெல்பேண் - அவுஸ்திரேலியா 1956 ஒலிம்பிக் போட்டிகளினூடாகத் தொடர்ந்த அவரது தடகளப் பயணத்தில், ரோக்கியோ - ஜப்பான் 1958ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் எதிர் கண்ட வெற்றி எந்த விளையாட்டிலும் இலங்கை பெற்ற முதல் தங்கப் பதக்கம் என்ற பெருமையையும் பெற்றது. நான்கு ஆண்டுகளின் பின்னர், ஜகார்த்தா - இந்தோனேசியா 1962ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் எதிர் வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் உயரம் பாய்தல் போட்டிகளில் எதிர் கலந்து கொண்ட ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் இருந்த சாதனைகளை முறியடித்தார். பழைய பஸ் வண்டி அச்சுகள் மற்றும் பிற பஸ் பாகங்களைப் பயன்படுத்தி வீட்டில் உருவாக்கிய பொருட்களைத் தனது உடலை வலுப்படுத்தும் பயிற்சிகளுக்காக எதிர் பயன்படுத்தினார். கொழும்பில் 1951ஆம் ஆண்டு நடந்த தேசிய மட்டத்திலான போட்டியில் வென்ற பின்னர் அவருக்கு முதற்தடவையாக ஒரு சிறப்பு தடகள பயிற்சியாளரான பி. இ. ராஜேந்திராவின் நெறிப்படுத்தலும் கட்டமைப்பான உடற்பயிற்சி வழிமுறைகளும் கிடைத்தன. பின்னர்,

1952 ஒலிம்பிக் போட்டிகளுக்கான அணியில் எதிர் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்லாந்து நாட்டிலுள்ள ஹெல்சிங்கி நகரத்தை அடைய ஒரு மாதத்திற்கும் மேலாகக் கடற்கப்பலிற் பயணம் செய்து எதிர் அதிலே கலந்து கொண்டார். 1954 ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் அவருக்குப் பதக்கம் ஏதும் கிடைக்காவிட்டாலும், தங்கம் - வெள்ளி - வெண்கலம் என்று பதக்கங்கள் வென்ற வீரர்கள் தாண்டிய 1.95 மீற்றர் உயரத்தை அவரும் தாண்டியிருந்ததால் அவருக்கு விதிகளின்படி நான்காவது இடம் கிடைத்ததுடன், வெற்றியாளர்களுடன் புதிய உயரம் பாய்தல் ஆசிய சாதனையை எதிர் மூன்று வீரர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

ஆசிய சாதனைக்கு அடுத்து வந்த ஆண்டுகளில் (1955 மற்றும் 1956), சிலோன் டெய்லி நியூஸ் குழுமத்தின் "ஆண்டின் விளையாட்டு நட்சத்திரமாக" எதிர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது பயிற்சியாளருக்கு அருகிலேயே இருப்பது சிறப்பு என்பதால், தனது பல்கலைக்கழகப் புகுமுகக் கல்வியைத் தொடர்வதற்காகக் கொழும்பில் உள்ள புனித ஜோசப் கல்லூரியில் எதிர் சேர்ந்தார். கலிபோர்னியா பல்கலைக்கழகம் லொஸ்ஏஞ்சல்ஸ் 1956ஆம் ஆண்டில் வழங்கிய முழுமையான மெய்வல்லுனர் புலமைப்பரிசு விருது அவரை அமெரிக்காவுக்கு அழைத்தது. தனது முதுகலைப் பட்டத்தை சான் லூயிஸ் ஒபிஸ்போ கலிபோர்னியா பொலிரெக்னிக் பல்கலைக் கழகத்தில் பெற்றுக்கொண்ட எதிர் 1971ஆம் ஆண்டில் கோணேல் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றார்.

உயரம் பாய்தலில் இலங்கைக்கான சாதனையை மட்டுமன்றி ஆசிய மட்டத்திலும் சாதனையைக் கொண்டிருந்த போதிலும், 1958ஆம் ஆண்டு ரோக்கியோ - ஜப்பான் ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான அணியில் எதிர் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இருந்தாலும், டெய்லி நியூஸ் பத்திரிகையின் விளையாட்டுப் பிரிவு செய்தியாசிரியர் காள்ரன் செனிவிரத்தின தொடர்ந்து எழுதி வந்த கட்டுரைகளின் அழுத்தம் காரணமாகத் தெரிவுக்குழு இறுதியில் தன்னைத் தளர்த்திக்கொண்டு கொண்டு எதிர் இந்த போட்டிகளிற் கலந்து கொள்ள



அனுமதித்தது. இருந்தாலும், பிந்தி அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார் என்ற காரணத்தைக் காட்டிய தெரிவுக்குழு இந்தப் போட்டிகளிற் கலந்து கொள்வதற்காக லொஸ் ஏஞ்சல்ஸ் நகரிலிருந்து ரோக்கியோ சொல்வதற்கான செலவை அவரே பார்த்துக் கொள்ளவேண்டும் என்று அறிவித்தது. அப்போது அவருக்கு ஆதரவாக புரவலர் டொனவன் அந்திரே கொடுத்த ஐயாயிரம் அமெரிக்க டொலர்களின் உதவியுடன் அந்தப் பயணத்தை எதிர் மேற்கொண்டு, போட்டிக்குச் சில நாட்கள் மட்டுமே இருக்கையில் ரோக்கியோவில் அணியுடன் இணைந்து கொண்டார். இந்தப் போட்டிகளின் போது அவருக்கான சீருடைகளை இலங்கை வழங்கவில்லை என்பதால், அவரது பல்கலைக்கழகத்தின் விளையாட்டுச் சீருடையில் இலங்கை அணியின் இலச்சினையை குத்திக்கொண்டு எதிர் அந்தப் போட்டிகளிற் கலந்து கொண்டார். இவற்றையெல்லாம் தாண்டி, இலங்கையின் அணியிலிருந்த மற்றைய போட்டியாளர்கள் அவரையே இலங்கை அணியின் தலைவராகத் தீர்மானித்தார்கள்.

இந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் எதிர் ஆறு அடி எட்டு அங்குலம் (2.03 மீற்றர்) தாண்டித் தங்கப்பதக்கம் பெற்றது மட்டுமல்லாது, இலங்கைக்கும் ஆசியாவுக்குமான உயரம் பாய்தல் சாதனைகளையும் நிலைநாட்டினார். இலங்கையின் இந்த உயரம் பாய்தல் சாதனை 1989ஆம் ஆண்டு வரை நிலைத்திருந்தது. இலங்கையின் சார்பில் உயரம் பாய்ந்து ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கையின் முதலாவது தங்கப்பதக்கத்தை எதிர் பெற்ற அதே வேளையில், இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான 1958 இன வன்முறை நடந்திருந்தது. இந்த இன வன்முறையை பற்றிய தகவல்களையோ இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் பிரச்னைகள் குறித்தோ இந்தப் போட்டிகளின் முடிவில் அமெரிக்காவுக்கு திரும்பிய பின்னர் அவரது சகோதரர் சொல்லும் வரையில் எதிர் எதுவும் அறிந்திருக்கவில்லை.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 1958இல் நடந்த அதே விடயங்கள் 1960 மற்றும் 1962ஆம் ஆண்டுகளிலும் நடந்தன! இலங்கைக்கானதும் ஆசியாவுக்கானதுமான உயரம் பாய்தல் சாதனைகளைத் தன் பெயரிலே கொண்டிருந்ததுடன் ஒலிம்பிக் போட்டிகளுக்கான உயரம் பாய்தல் தகுதிகாண் உயரத்தைத் தாண்டியிருந்த போதிலும், மெக்சிகோ 1960 ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளுக்கு எதிர் தேர்வு செய்யப்படவில்லை. ஜகார்த்தா - இந்தோனேசியா 1962 ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும் கூட அவர் இணைத்துக் கொள்ளப்படவேண்டும் என்ற இறுக்கமான பிரசார முன்னெடுப்புகளின் பின்னரே எதிர் சேர்த்துக் கொள்ளப்பட்டு, அங்கே அவர் வெள்ளிப் பதக்கத்தை இலங்கை சார்பில் பெற்றிருந்தார்.

போருக்கு முந்திய இலங்கையின் வரலாற்றில் நடைபெற்ற பல சிக்கலான நிகழ்வுகளின் முதன்மையான நேரடிச் சாட்சியாக எதிர் இருந்திருந்தார். இலங்கையில் சிங்களம் மட்டும் சட்டம் 1956ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்வுக்கு எதிராக இலங்கைத் தமிழரசுக் கட்சி காலிமுகத் திடலில் நடத்திய சத்தியாக்கிரகத்தைப் பார்ப்பதற்காக இரண்டு நண்பர்களோடு சென்றிருந்த போது எதிர் மரணத்திலிருந்து தப்பித்துக் கொண்டிருந்தார். அமைதியான சத்தியாக்கிரகப் போராட்டக்காரர்கள் கடுமையாக தாக்கப்பட்டு, அதைத் தொடர்ந்து தமிழர்களுக்கு எதிரான வன்முறை நாடெங்கும் பரவியிருந்தது. அப்போதுதான் அவரும் அவரது இரண்டு நண்பர்களும் வன்முறையாளர்களால் கொல்லப்படும் நிலைமை வந்திருந்தது. அதிர்ஷ்டவசமாக, ஒரு வன்முறையாளர் தான் முன்னர் பார்த்த "ஆண்டின் விளையாட்டு நட்சத்திரம்" விருது வழங்கப்பட்ட படத்திலிருந்து எதிரை அடையாளம் கண்டுகொண்டார். அந்த வன்முறையாளர் அவரைப் பாதுகாப்பாக ஒரு மருத்துவ நிலையத்துக்கு அழைத்துச் சென்று அங்குள்ள மருந்தாளரிடம் பாதுகாப்பாக நிலைமைகள் வரும் வரை அவர்களை உள்ளே வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டிருந்தார்.

தமிழர்கள் எதிர்கொண்ட இன்னொரு வரலாற்று நிகழ்ச்சியை நேரடியாக எதிர் கண்டிருந்தார். யாழ்ப்பாணம் அரச அதிபர் பணிமனைக்கு முன்பாக தமிழ் அரசியற் கட்சிகளின் உறுப்பினர்கள் மேற்கொண்ட சத்தியாக்கிரகத்தைப் பார்ப்பதற்காக 20 பெப்ரவரி 1961 அன்று எதிர் யாழ்ப்பாணம் போயிருந்தார். அங்கும் அமைதியான போராட்டக்காரர்கள் அரச வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார்கள்.

அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பட்டத்தை பெற்ற பின்னர் எதிர் இலங்கை திரும்பினார். ஆனாலும் தான் தேர்ந்த விவசாயக் கல்வித் துறையில் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்வதில் அவருக்குச் சிரமங்கள் இருந்தன. ஒரு முதுகலைப் பட்டத்தைப் பெற்று இலங்கை திரும்பினால் தொழில் வாய்ப்புகள் சிறப்பாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பில் எதிர் மீண்டும் அமெரிக்கா திரும்பினார். ஆனாலும் பல்லாயிரம் தமிழர்கள் முகம் கொடுத்ததைப் போலவே, முதுகலைப் பட்டத்தின் பின்னரும் இலங்கையில் அவருக்கு வாய்ப்புகள் கிடைக்கவில்லை. அப்போது அவருக்கு கிடைத்த விரிவுரையாளர் பதவி ஒன்றை சியரா லியோன் நாட்டின் நிஜாலா பல்கலைக்கழகத்தில் எதிர் ஏற்றுக்கொண்டார். தமது பல்கலைக்கழகக் கற்பித்தல் துறையில் சியரா லியோன், நைஜீரியா, பப்புவா நியூகினி போன்ற நாடுகளில் அவர் தொடர்ந்து பணியாற்றினார். ஐக்கிய நாடுகள் அமைப்பான ருநேுளுஊழு நிறுவனத்திலும் அவர் பணிபுரிந்தார்.

அவர் சியரா லியோன் நாட்டில் இருந்த காலத்தில், 1965ஆம் ஆண்டு ஜூலியற் ஆன் பவர் (**Juliet Ann Power**) என்ற தமது முழு அன்புக்குப் பாத்திரமான ஒருவரைச் சந்தித்துத் திருமணம் செய்து கொண்டார். தனது பல்கலைக்கழகக் கல்வியை முடித்த ஜூலியற் ஆன் பவர் **US Peace Corps** அமைப்புடன் இணைந்து அப்போது சியரா லியோன் வந்திருந்தார் இந்த இணையருக்கு மூன்று பிள்ளைகளும் எட்டு பேரப்பிள்ளைகளும் இருக்கிறார்கள். அவர்கள் 2024ஆம் ஆண்டின் மே மாதத்தில் தமது 58ஆவது திருமண நிறைவு நாளைக் கண்டிருப்பர்.

தனது அறுபதாவது வயதில் பணி ஓய்வு பெற்ற எதிர் 1994ஆம் ஆண்டு தான் பிறந்து வளர்ந்த - தனது மெய்வல்லுனர் நாட்களில் தன்னை ஆதரித்த - நாட்டுக்கும் அந்த மக்களுக்கும் நன்றியுடன் பணி செய்ய விரும்பினார். போருக்கு மத்தியிலும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் விவசாயத் துறையில் பணி செய்வதற்காக அவர் செய்த விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. தாயகம் திரும்பிய எதிர், தொடர்ந்து நடந்து கொண்டிருந்த போர் மற்றும் வட இலங்கை மக்கள் மீதான எரிபொருள், மின்சாரம், உணவு, மருத்துவம் போன்ற அத்தியாவசிய பொருள்களுக்கான கடுமையான பொருளாதாரத் தடைகள் போன்றவற்றுக்கும் மத்தியிலும் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்த வன்னிப் பிரதேசத்தில் ஓராண்டுக்கான ஒப்பந்தத்துடன் பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்டார்.

ஓராண்டு பணிபுரிந்து விட்டு அமெரிக்கா திரும்புவதை விடுத்து, ஒரு வருமானம் தேடாத தன்னார்வப் பணியாளராகத் தமது ஒப்பந்தத்திற்குப் பின்னரும் வன்னியில் எதிர் தொடர்ந்து பணிபுரிந்தார். மனிதநேயம், கல்வி, விளையாட்டு போன்ற பல துறைகளில் மக்களுக்கான உதவிகளைப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வழங்கும் நோக்கில் அவரது ஓய்வற்ற பணி தொடர்ந்தது. ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து ஒக்ரோபர் மாதம் 1995ஆம் ஆண்டு வன்னி மற்றும் வேறு பிரதேசங்களுக்குப் போனபோது எதிர் கிளிநொச்சியில் இருந்தார். உள்ளக இடம் பெயர்வாகக் கிளிநொச்சிக்குப் போன மக்களை வரவேற்று அவர்களுக்கான அவசர உணவு மற்றும் உறைவிட வசதிகளைச் செய்யும் பணியாளர்கள் குழுக்களில் எதிர் முக்கிய பங்கு வகித்தார்.

தனது பயிற்சிகள் மற்றும் கற்பித்தல் வாழ்க்கை அனைத்தும் தனது எஞ்சிய வாழ்நாள் முழுவதும் ஊதியம் பெறாத தன்னார்வப் பணிக்காகத் தன்னை நெறிப்படுத்தியதாக அவர் உணர்ந்தார். முப்பது ஆண்டுகளுக்கு முன்னர், 1994ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு கோவிட் பெருந்தொற்று பரவும் வரை ஆறு முதல் பத்து மாதங்கள் வரை இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் வாழ்ந்து தனது பணியை அவர் தொடர்ந்தார். புலம்பெயர் தமிழர்கள் வழங்கிய பணிசார் ஆதரவுகளும், தனிப்பட்ட செலவுகளுக்காக அவரது மனைவி ஜூலியற் வழங்கிய ஆதரவும் அவரது பணிகளுக்குத் தோள்கொடுத்தன.

(16ம் பக்கம் பார்க்க)

(15ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி, விளையாட்டு மற்றும் மிகவும் பின்தங்கிய சமூகங்களுக்கான ஆதரவு போன்வற்றில் எதிர் முக்கிய கவனம் செலுத்தினார். அவரது வாழ்நாள் முழுவதும் சாதிய அமைப்புக்கு எதிரான ஒரு சக்தியாக எதிர் இருந்தார்.

அமெரிக்காவில் குடியுரிமை பெறுவதற்குத் தகுதி பெற்றிருந்தாலும் இலங்கைக்கான குடியுரிமையை அவர் கைவிடவில்லை. இலங்கைக்கான தமது கடைசிப் பயணத்தின்போது, 2023ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், தமது 88ஆவது வயதில், கோவிட் நோயால் பாதிக்கப்பட்டிருந்தாலும் தடகளப் பயிற்சியாளர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் எதிர் பயிற்சி முறைகள் மற்றும் திறமைகளை அடையாளம் காணுதல் போன்றவற்றில் பட்டறைகளை வழங்கினார்.

சிக்கல்களுக்கு மத்தியில், 1994ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டில் போர் முடிவடையும் வரை, எதிர் அமைதிக்காகவும் பேச்சுவார்த்தை மூலம் போரை முடிவுக்கு கொண்டுவரவும் அயராது உழைத்தார். போர்க்காலத்திலும் 2004 சுனாமியாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அவர் உலகம் முழுவதும் பயணம் செய்து அரசாங்கங்கள், அரசியல் தலைவர்கள், மனிதநேய மற்றும் மனித உரிமைக் குழுக்கள், மற்றும் புலம்பெயர் தமிழ் மக்கள் அமைப்புகளையும் சந்தித்துப் பேசினார். எதிர் செய்த மிகவும் காத்திரமான பணிகள் போர் 2009ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்த பின்னர் செய்யப்பட்டன. அவரது விளையாட்டுச் சாதனைகளும் அதனூடு செறிந்த புகழும் மோதலில் ஈடுபட்டிருந்த அனைத்து தரப்பினராலும் நன்கு மதிக்கப்பட்டமையால் எல்லோரையும் அணுகுவது அவருக்கு இலகுவானதாக இருந்தது. இவ்வகையில், எல்லோரையும் சந்திப்பது மாத்திரமல்லாது அமைதிக்கான சூழ்நிலையை உருவாக்கும் நோக்கில் போரிடும் தரப்புகளுக்கிடையே அதிகாரப்பூர்வமற்ற செய்திகளுக்கு ஓர் ஊடகமாகவும் பாலமாகவும் இருக்க அவருக்கு முடிந்தது. போர் முற்றுவதற்கு முன்னர், அவரது பங்களிப்புடன் 1997ஆம் ஆண்டில் முயற்சிக்கப்பட்ட ஹார்வர்ட் முன்னெடுப்பு இந்த எண்ணற்ற முயற்சிகளில் ஒன்றாகும். மற்றவையைப் போலவே இந்த முயற்சியும் தோல்வி கண்டிருந்தது.

போர் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளில் மனிதநேயம் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் மூலம் எதிர் ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் நேரடியாகப் பங்கெடுத்தார். தானே ஓர் உதாரணமாக, மற்றவர்களைத் தன்னலமின்றி வாழவும் சமுதாய முன்னேற்றத்திற்காக உழைக்கவும் ஊக்குவித்தார். எதிர் மேற்கொண்ட திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகள் பல்வேறு துறைகளிற் பரந்திருந்ததுடன், அவர் எப்போதும் கவனத்திற் கொண்டிருந்த மாற்றுத் திறனாளிகளையும் முழுமையாக உள்ளடக்கியிருந்தன. போர் முடிவடைந்த பின்னர் அவர் இணைந்து உருவாக்கிய **SERVE Institute** அமைப்பு கல்விக் காணொலிகளைத் தயாரித்து வடக்கு மற்றும் கிழக்கு முழுவதும் உள்ள பள்ளிகளுக்கு விநியோகித்தது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போரினால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சில தொலைதூரப் பகுதிகளில், குறிப்பாக சாதியின் காரணமாக ஒதுக்கப்பட்ட மக்கள் வாழ்ந்த பிரதேசங்களில், தகுதியான ஆசிரியர்கள் இல்லாததால், பல சிரமங்கள் இருந்தன. அவர்களைக் கருத்திற் கொண்டு இந்த அமைப்பு கணிதம், அறிவியல், இரசாயனவியல் (வேதியியல்), பௌதிகவியல் (இயற்பியல்) மற்றும் பிற பாடங்களில் ஆற்றல் வாய்ந்த ஆசிரியர்களின் காணொலிகளைத் தமிழில் உருவாக்கியது. வடக்கு மற்றும் கிழக்கு முழுவதும் உள்ள பள்ளிகள் அந்த மேலதிக வளங்களைச் செலவின்றிப் பெற்றுக்கொண்டன. கோவிட் தொற்றுநோய் பள்ளிக்குச் செல்வதைத் தடுத்தபோது இந்தக் காணொலிகள் மாணவர்களுக்கு மதிப்புமிக்க வளங்களாகக் கைகொடுத்தன.

வடமாகாணக் கல்விமுறை குறித்து 2014ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வடமாகாணக் கல்விமுறையின் புதிய ஆய்வுகளுக்குப் பின்னால் இருந்த முதன்மை மூளையாகவும் வலுவாகவும் எதிர் இருந்தார். இந்த ஆய்வு ஆயிரக்கணக்கான பெற்றோர்கள், கல்வியாளர்கள், சமூகத் தலைவர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்களிடம் ஆலோசனைகளைக் கேட்டது. இதன் விளைவாக வடக்கு கல்வி முறை மறுஆய்வு **(Northern Education System Review - NERS**) என்ற தலைப்பில் கல்வி முறையை மேம்படுத்துவதற்கான பரவலானதும் மாறுபட்டதுமான பல பரிந்துரைகள் இந்த ஆய்வு அறிக்கையில் இருந்தன. இந்த அறிக்கையின் பல பரிந்துரைகள் வட மாகாணக் கல்வி அமைச்சினால் இணைக்கப்பட்டன. இந்த அறிக்கையின் பரிந்துரைகளால் ஈர்க்கப்பட்ட கொழும்பிலுள்ள இலங்கையின் கல்வி அமைச்சு சில பரிந்துரைகளைத் தமது செயற்பாடுகளில் இணைத்துக் கொண்டது. நாட்டின் பிற பகுதிகளிலும் இதே போன்ற ஆய்வுகள் நடாத்தப்பட்டன.

இனம், மதம் அல்லது மொழிப் பின்னணி என்ற வேறுபாடுகள் எதுவுமில்லாமல் மக்களுக்கு உதவுவது தமது பணி என்று எதிர் நம்பினார். இலங்கை முழுவதுமான அவரது பயணத்தில் இவருக்குப் பயிற்சி அளித்து அனைத்துலக மட்டத்தில் இவரைப் போட்டியிட வைக்கலாம் என்று பல விளையாட்டு வீரர்களை எதிர் அடையாளம் காட்டினார். இவர்களில் முதன்மையானவர் மஞ்சுள குமார விஜேசேகர. உயரம் பாய்தல் போட்டியில் இலங்கை மட்டத்தில் உயரம் பாய்தல் சாதனை படைத்த மஞ்சுளவை அமெரிக்காவுக்கு அழைத்துப் போனபோது அவருக்கு கொஞ்சம் ஆங்கிலம் தான் பேச முடிந்தது. எதிர் சிங்களம் பேச முடியாதவராக இருந்தார். தமது குடும்பத்துடன் ஓர் ஆண்டு காலம் மஞ்சுளவை வாழவைத்து எதிர் அவருக்குப் பாய்ச்சலிலும் ஆங்கிலத்திலும் கடுமையான பயிற்சிகளைக் கொடுத்தார் எதிர். முடிவில், மஞ்சுள தெற்கு கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் முழு உதவித்தொகை பெற்றுக் கல்வியையும் விளையாட்டையும் தொடர்ந்தார். தற்போதைய இலங்கை உயரம் பாய்தல் சாதனையாளரான உஷான் திவாங்க பெரேராவுக்கும் எதிர் இதே போன்ற வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்தார். உயரம் பாயும் வீரர்களான நளின் பிரியதர்ஷன மற்றும் பூர்ணிமா குணரத்தின ஆகியோர் லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள அவரது வீட்டிலே தான் தங்கியிருந்தனர். எதிர் அவர்களுக்குப் பயிற்சி அளித்து, அமெரிக்கப் பல்கலைக்கழகங்களுக்கு உதவித்தொகை பெறுவதற்கான தேடலில் அவர்களுக்கு உதவினார்.

இலங்கை சார்பில் ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற சுசாந்திகா ஜெயசிங்கவும் எதிரின் வீட்டிலே தங்கியிருந்தார். தனிப்பட்ட காரணங்கள் ஏற்படுத்திய இடைவெளியின் பின்னர் 2007ஆம் ஆண்டில் சுசாந்திகா தடகளப் போட்டிக்குத் திரும்பும்போதும் எதிர் அவருக்கு மூன்று மாதங்கள் பயிற்சியளித்தார். அந்த ஆண்டு ஜப்பான் ஒசாகாவில் நடந்த உலக சாம்பியன்ஷிப் போட்டியில் சுசாந்திகா வெண்கலப் பதக்கம் பெற்றார். சுசாந்திகா மற்றும் மஞ்சுள போன்றோர் போருக்குப் பிந்தைய இலங்கையின் வடபகுதியில் எதிர் நடத்திய பயிற்சிப் பட்டறைகளில் இணைந்து உதவினர்.

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்க எதிருக்கு 1998ஆம் ஆண்டு ‘தேசபந்து’ என்ற மதிப்புமிக்க விருதை வழங்க முன்வந்தார். இந்த உச்ச அங்கீகாரத்தை மரியாதையுடன் மறுத்த எதிர், ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில், “என் மக்கள் துன்பப்படும் வேளையில் போர் தொடரும் வேளையில் எனது மனச்சாட்சியுடன் இந்த விருதை என்னால் ஏற்க முடியாது” என்று குறிப்பிட்டார்.

சகோதரர்கள் செல்லத்துரை நித்தியானந்தம், நாகலிங்கம் இரத்தினசிங்கம், நாகலிங்கம் இராஜசிங்கம், நாகலிங்கம் செகராஜசிங்கம், மற்றும் நாகலிங்கம் பரராஜசிங்கம், சகோதரி பரமேஸ்வரி நடராஜா என்ற ஆறு உடன்பிறப்புகளின் பின்னர் கடைசியாகப் பிறந்தவர் எதிர்.

நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் அவர்களின் குடும்பத்தில் மனைவி 57 வயதுடைய ஜூலியற் எதிர்வீரசிங்கம், அவர்களது பிள்ளைகள் சகுந்தலா, நகுலன் மற்றும் அர்ஜூனன் ஆகியோருடன் அவரது எட்டு பேரக்குழந்தைகள் உள்ளனர்.

**ஆங்கில மூலம்: அர்ஜூனன் எதிர்வீரசிங்கம்**
**தமிழ் வடிவம்: பாலா விக்னேஸ்வரன்**





